



# தினப்புயல்

news THINAPPUYAL තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –414

## யாழ். தையிட்டியில் பௌத்த மத ஆக்கிரமிப்பு – நடப்பது என்ன?



## கட்டாய மதமாற்றத்தை வந்தேறிகளான கிறிஸ்தவர்கள் செய்கின்றார்கள்

கம்பவாரிதி ஜெயராஜ்




## இந்தியாவை உளவு பார்க்க இலங்கையில் "ரேடார்" சீனாவின் திட்டம் அம்பலம்



## ஜனாதிபதி தேர்தல் நோக்கிய ரணிலின் நகர்வுகள்



# யாழ்.தையிட்டியில் பௌத்த மத ஆக்கிரமிப்பு – நடப்பது என்ன?



யாழ்ப்பாணத்தில் தையிட்டி பிரதேத்திலே பலவந்தமாக பௌத்த சிலை நிறுவப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னனின் பாராளுமன்ற உறுப்பினர். செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டதரணி காண்டீபன் அவர்களும் தொடந்து அந்த போராட்டகளத்தில் இருப்பதை காணக்கூடிதாக இருக்கின்றது. உண்மையில் பார்க்கின்ற பொழுது நில ஆக்கிரமிப்பை போன்று இவர்கள் பௌத்த மத மயமாக்க திணிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு நடவடிக்கையே கடந்த சில நாட்களாக இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

அதே போன்று அருண் சித்தார்த்தன் என்று கூறப்படுபவர் கூட பௌத்த சிலைகளை நான் வடக்கு.கிழக்கில் நிறுவுவேன் என்று நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார். இப்படி அரச கைக்கூலிகளாக செயற்ப்படுபவர்களும் ஜாதி.மத பிரச்சனைகளை யாழ்ப்பாணத்தில் தோற்றுவிக்கின்ற சில அமைப்புக்களும் இன்று இந்த பௌத்த சிலைகளை நிறுவுவதற்கு அவர்களுக்கு உடந்தையாக செயற்ப்படுகின்றார்கள் என்பது கண்கூடு.

இன்று தமிழ் மக்கள் வாழுகின்ற வடக்கு.கிழக்கு பிரதேசத்தில் இவ்வாறான சுபீகரிப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் . மாகாணசபை உறுப்பினர்கள் . புத்திஜீவிகள் அனைவருமே இதற்கான போராட்டங்கிளில் முன்னின்று செயற்பட வேண்டும். உண்மையாக நாவற்குழி. குருந்தூர் மலை. தையிட்டி போன்ற இடங்களில் கோபுரம் வரை பௌத்த சிலைகளை கட்டியிருக்கின்றார்கள். அதே நேரத்தில் ஒரு பக்கம் கிறிஸ்வம் - இந்து போன்ற மதவாதங்களை தூண்டிவிட்டு சிலை உடைப்புக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான மதவாத பிரச்சனைகளை இங்கு தூண்டி விட்டு மக்களை திசைதிருப்பி கொண்டு தங்களுக்கு சாதமாக எங்கு எங்கு பௌத்த சிலைகளை வைக்க முடியுமோ அங்கு அங்கு பௌத்த சிலைகளை வைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு செய்து வருகின்றது.

நல்லாட்சி என்ற மைத்திரி யுகத்தில் தையிட்டி புத்த விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது பிரதேச. மாவட்ட அபிவிருத்திக் குழுவின் .ணைத் தலைவர்களாக அங்கஜன் .ராமநாதன். மாவை சேனாதிராஜா. மந்திரி விஜயகலா. முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் அதிகாரம் மிக்கவராக சுமந்திரனும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக சிறீதரனும் .ருந்தனர். அப்போது அவர்களது ஆட்சியில் வடகிழக்கில் 1000 விகாரைகள் அமைப்பேன் என அன்றைய தொல்லியல் துறைக்கு பொறுப்பான அமைச்சரான .ன்றைய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தேர்தல் விஞ்ஞானத்தில் ஆணித்தரமாக கூறினார். அன்று புத்த விகாரை அமைக்கப்பட்ட போது மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்திய நல்லாட்சி என்ற அரசின் காவலர்களான கூட்டமைப்பினர். தையிடி புத்த விகாரை கட்டி முடிக்கப்பட்டு கலசம் வைத்த பின்னர் இன்று யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்வதாக கூறி கூட்டத்தில் இருந்து சென்றனர். இதனை நல்லாட்சி என்ற அரசில் செய்து இருக்கலாம் அல்லவா...?

ஆனால் இன்று நீங்கள் பார்க்கின்ற பொழுது பௌத்த சிலைகளை முக்கியமான சில இடங்களில் வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் செய்கின்றார்கள். அவர்கள் இராணுவ. பொலிஸார்கள் அரசாங்கத்தின் அதிகாரங்களுடன் அவற்றை வைப்பதற்கான நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனை நாங்கள் தடுத்து நிறுத்தா விட்டாள் இனி நல்லூர் கோயில் வரை இந்த பௌத்த சிலைகள் வைப்பதற்கான ஒரு நிலைக்கு தள்ளப்படுவோம். எதுவுமே பேச முடியாத மௌனிகளாக இருக்கும் போது நமக்கு ஞானம் பிறக்கும் என சட்டதரணி சுபாஷ் அவர்கள் தெளிவாக கூறியிருந்தார். உண்மையிலே இது தான் நடக்கப்போகின்றது. வடக்கில் அமைச்சா டக்ளஸ் தேவானந்தா .கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான வியாழேந்திரன். பிள்ளையான் போன்றோர் இருக்கின்றார்கள். இருந்தும் அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலைமையே காணப்படுகின்றது. டக்ளஸ் தேவானந்தா கூட தையிட்டி பிரச்சனையில் தலையிடவில்லை. நாவற்குழியில் பௌத்த சிலையயை வைத்த பொழுது கூட டக்ளஸ் தேவானந்தா தலையிடவில்லை. யாழ்பாணத்தை நேசிப்பவர். யாழ் மக்களை நேசிப்பவராக இருந்தால் நிச்சயமாக தையிடி பிரச்சனையில் அவர் கலந்து கொள்ள வேண்டும். இந்த பௌத்த சிலை நிறுவப்பட்ட இடத்தை உடைத்து தரைமட்டமாக்க உத்தரவு கொடுத்திருக்க வேண்டும். இன்று மக்கள் புரட்சி ஒன்று அங்கு வெடிக்கப்பட உள்ளது. மக்கள் புரட்சிக்கான ஒரு களத்தினை அங்கு அமைக்கின்றார்கள். தற்பொழுது தையிட்டி பிரச்சனையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கழத்திலே நிற்கின்றது. விமர்சனங்களுக்கு அப்பால் ஆக்கிரமிக்கப்படுகின்ற இடங்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை ஒரு பக்கதிலே எடுத்துக்கொண்டு தான் நிற்கின்றது. தையிட்டி பிரதேசத்திலே சிங்கள குடிகளே இல்லாத ஒரு இடத்திலே பௌத்த விகாரை அமைப்பது என்பது உண்மையில் அது ஒரு தமிழ் மக்களுடைய மனங்களை நோகடிக்கின்ற செயற்பாடாக தான் இருக்கின்றது. ஆகவே அரசாங்கம் உடனடியாக இதனை கைவிட வேண்டும். அந்த இடத்திலே தொடர்ந்தும் பௌத்த ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறுமாக இருந்தால் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பௌத்த கோபுரத்தை அழித்து நொறுக்குவதற்கான முன்னெடுப்புகளை நகர்த்த வேண்டும். ஏனென்றால் அடக்கு முறை என்பது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆயுதம் இல்லா விட்டாலும் அகிம்சை வழியில் அடுத்த நகர்வுகள் நகர்த்தப்பட வேண்டும் என்பது அவசியமாக இருக்கின்றது. திட்டமிட்டு திணிக்கப்படுகின்ற இந்த பௌத்த மேலாதிக்கம் உண்மையில் தூக்கி வீசப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 2009 இற்கு பின்னர் காங்கேசன்துறை . பலாலி . நயினாதீவு. நாவற்குழி. நெடுந்தீவு. தையிட்டி என தொடரும் பௌத்த ஆக்கிரமிப்பு ஒரு போதும் முற்று பெற போவதில்லை. வல்லிபுர பகுதியில் வசப மன்னன் **(King Vasabha)** காலத்துக்குரிய பௌத்த தொல்லியல் சான்றுகள் **(Vallipuram Gold Plate)** இருப்பதாக உரிமை கோரி இருக்கின்றார்கள். ஊர்காவத்துறை பௌத்த மன்னர்களின் முழுமையான ஆதிக்கத்தின் கீழ் 12 ஆம் நூற்றாண்டு வரை இருந்தாக சொல்லுகின்றார்கள். 8 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வலிகாமம் மற்றும் மட்டுவில் எங்கும் பௌத்த சிங்களவர்கள் வாழந்த பல தொல்லியல் அடையாளங்கள் **(dagaba)** இருப்பதாக பதிவு செய்து இருக்கின்றார்கள். நிலாவரையில் 10 ஆம் நூற்றாண்டுக்குரிய புத்தர் சிலையின் மேற்பகுதி . விகாரை எச்சங்கள் **(dagaba)** . செவ்வக மண்டபம் **(rectangular)**. என்பன கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாக சொல்லுகின்றார்கள் சுன்னாகம் ரயில் நிலையத்தில் ரயில் பாதையின் மேற்கே தொன்மையான விகாரை எச்சங்களைக் 1917 ஆம் ஆண்டில் அடையாளம் கண்டு பிடித்து இருப்பதாக சொல்லுகின்றார்கள். அதே போன்று சுன்னாகத்திலுள்ள கொடியவத்தை என்கிற இடத்திலும் பௌத்த விகாரையொன்றின் எச்சங்கள் இருப்பதாக உரிமை கோருகின்றார்கள். மல்லாகத்திலும் பௌத்த மத தொல்லியல் அடையாளங்கள் **(fragments of a yantragala (depost-stone)** இருப்பதாக உரிமை கோருகின்றார்கள். உடுவிலிலும் பௌத்த மத சான்றுகள் **(Buddha Statue> dagaba)** இருக்கிறது என உரிமை கோருகின்றார்கள். மஹியம்பிட்டி என்கிற இடத்திலும் பௌத்த மத அடையாளங்கள் இருக்கிறது என சொல்லுகின்றார்கள். புலோலியிலும் பௌத்த மத தொல்லியல் சான்றுகள் **(siripatul stone)** இருப்பதாக சொல்லுகின்றார்கள். பருத்தித்துறை பொன்னாலை வீதியிலும் பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக உரிமை கோருகின்றார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் இந்து - கிறிஸ்தவம் என்னும் பிரச்சனையை ஓர் பக்கம் உருவாக்கி அது வேறு பக்கதில் சென்றுக்கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில் இன்று தையிட்டி பிரச்சனை மிக முக்கியமாக பார்க்கப்படுகின்றது. குருந்தூர் மலையை பார்க்கின்ற பொழுது அடுத்த முறை அவர்கள் அபிஷேகம் செய்து அங்கு அவர்களுடைய வழிபாடு இடம்பெறுவதற்கான நிலைமை காணப்படுகின்றது அத்துடன் அங்கு பௌத்த துறவிகளையும் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை பூர்த்தி செய்து விடுவார்கள். இப்படியான ஒரு நிலமை தான் அங்கு இருக்கின்றது.

இங்கே மக்கள் மயப்படுத்தப்பட்ட வெகுஜன போராட்டங்கள் ஊடக மட்டுமே இவற்றை எதிர்கொள்ள முடியும். அரசியல் விருப்பு வெறுப்புக்கு அப்பால் மக்கள் சக்தியாக இதை எதிர்கொள்ள தவறினால் யாழ்ப்பாணத்தை காப்பாற்ற முடியாமல் போகும். பிரச்சனைகளின் அடையாளங்களை புரிந்து கொள்ளாமல் சமூக தளங்களில் விதண்டாவாதம் பேசி கொண்டு இருப்பதால் எந்த நெருக்கடிக்கும் தீர்வு காண முடியாது. தமிழ் மக்கள் ஆகிய நாம் ஒரு குடையின் கீழ் ஒன்று திரள வேண்டிய தேவை இருக்கின்றது. இன்று அனைத்து கட்சி தலைவர்களையும் இங்கு பார்க்கின்ற பொழுது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது. நிச்சயமாக இவ்வாறான ஒற்றுமை அனைத்து விடயங்களிலும் பேணப்படுமாக இருந்நதால் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் வெல்வது உறுதி என்பதை இவ்விடத்தில் கூறிக்கொண்டு தையிட்டியில் பௌத்த விகாரை அமைக்க கூடாது என்று போர்க்களத்தில் போராடிக்கொண்டிருக்கின்ற அனைத்து அரசியல் தலைமைகளும் தொடர்ந்தும் இவற்றுகாக குரல் கொடுக்க வேண்டும் என்பதே இன்றைய நிலைப்பாடு.



இரணியன்

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## வடக்கில் தொடரும் நில ஆக்கிரமிப்பு!

தற்பொழுது வடக்கில் பேசுபொருளாக இருப்பது தையிட்டியில் சட்டவிரோதமாக புத்தர் சிலை பௌத்த விகாரை அமைக்கப்பட்டுக்கொண்டிருப்பது என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயம். அண்மை காலமாக வடகிழக்கில் இவ்வாறான நில ஆக்கிரமிப்புக்களும் பௌத்த விகாரைகளின் திடீர் தோற்றமும் மக்களை அச்சத்திலும், ஆச்சரியத்திலும் கொண்டு செல்கின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த வாரங்களில் வவுனியாவில் வெடுக்குநாறி மலையில் சிலைகள் உடைப்பிற்கான பிரச்சனை நடந்து தற்பொழுது அது நீதி மன்றம் அளவில் கொண்டு சென்று இன்று உடைக்கப்பட்ட சிலைகள் திரும்பவும் அதில் வைக்கப்பட்டு மக்களுக்கான வழிப்பாடுகள் சிறப்பாக நடைபெறும் விதமாக மாற்றி அமைக்கப்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறாக இன்று தொடர்ந்து வடக்கில் பௌத்த மத திணிப்பும், நில ஆக்கிரமிப்புக்களும் நடைப்பெற்று பெற்றுக்கொண்டிருக்கின்றது. தற்போது, 2018 ஆம் ஆண்டு தையிட்டியில் அடிக்கல் நாட்டப்பட்டு தற்போதே கட்டுமாணப் பணிகள் நிறைவடைந்துள்ள விகாரையை அகற்றுமாறு போராட்டம் நடத்தப்படுகிறது.

தற்போதைய நிலையில், விகாரை கட்டப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக் காணி வழங்கப்படுவதை தவிர வேறு எதுவும் நடக்காது என்று தெளிவாக தெரிந்தும் போராட்டம் நடத்தப்படுகிறது. குறித்த போராட்டத்தின் பயனாக, விகாரையின் வழிபாடுகள் இடையூறின்றி நடப்பதற்கான நீதிமன்ற கட்டளையை நாம் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

இப்போது, வவுனியாவில் இருந்து காணி உரிமையாளரை தேடிப்பிடித்து ஆவணங்களை திரட்டி வந்திருக்கும் சட்ட வித்தகர்கள், 2018 இல் குறித்த ஆவணங்களை திரட்டிக் கொண்டு மல்லாகம் நீதிமன்றிற்கு சென்றிருந்தால், விகாரை அமைப்பதற்கான தடையை பெற்றிருக்கலாம்.

அதேபோன்று, அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருந்தனர். "தெல்லிப்பளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மாறாக, குறித்த விகாரை அமைக்கப்பட்டிருப்பதால் ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் கலந்து கொள்வதில் அர்த்தம் இல்லை என்ற அடிப்படையில் வெளிநடப்பு செய்கின்றோம்" என்று காரணம் சொல்லப்பட்டிருந்தது. ஒருங்கிணைப்புக் குழு என்பது மாவட்டத்தின் அபிவிருத்திகளையும் அரசாங்க வேலைத் திட்டங்களையும் வினைத்திறனாக முன்னெடுப்பதற்கான ஒரு கட்டமைப்பு. மத ஸ்தலங்களை அமைப்பதற்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி அவசியம் இல்லை.

எனவே, எந்தப் பலனும் அற்ற தீர்மானத்தினை ஒருங்கிணைப்புக் குழுவில் நிறைவேற்றி விட்டு, குறித்த தீர்மானம் கண்டு கொள்ளப்படவில்லை என்று வெளிநடப்பு செய்வது சுயலாப அரசியலின் உச்சமே அன்றி, மக்களின் நலனோ... எமது தேசம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறையோ கிஞ்சித்தும் கிடையாது என்பதன் வெளிப்பாடு.

இவ்வாறான சம்பவங்கள் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதற்கு அவசியமான அடிப்படைகளை பாதுகாப்பது யார்? - சேதாரப்படுத்துவது யார்? என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்

# கல்லறைப் பூக்கள்



**பல்துறை எழுத்தாளர்**
**புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்**

'மினி பஸ்'ஸில் இரும்பு கம்பிகளையும் இறப்பர் பட்டிகளையும் பிடித்துக் கொண்டு பலர் தமது தேவைகளுக்காக பயணத்தை மேற் கொண்டார்கள் அவர்களில் நிறை மாத கர்ப்பிணிப் பெண் ஒருத்தி கையில் 'கிளினிக் கொப்பி'யுடன் கம்பியில் தொங்கிய இறப்பர் பட்டியைப் பிடித்துக் கொண்டு முன்னுக்கும் பின்னுக்கும் ஆடிக்கொண்டு நின்றாள்.

கர்ப்பணிப் பெண்ணைக் கண்ணுற்ற ஐயா இயலாத வயதிலும் தள்ளாடி தள்ளாடி எழுந்து,

"தங்கச்சி இப்படி வா இதில் இரு"

"இல்லை ஐயா?"

"பரவாயில்லை"

"நீங்க பாவம்" - மனதுக்குள் வாழ்த்திக்கொண்டு அமர்ந்தாள். பக்கத்து ஆசனங்களில் 'மினி பஸ்'ஸின் பாடல் ஒலியுடன் இணைந்து சிரிப்பொலியும் காற்றுடன் சங்கமிக்கின்றன.

"இல்லை...இல்லை" - மேலே உள்ள கம்பியை வலக்கையால் பிடித்துக் கொண்டு, இடக்கையினால், தனது சிறிய பையைப் பற்றிக் கொண்டு முன்பக்கம் நோக்கி நடந்தார். மூன்று ஆசனங்கள் இடைவெளி நடந்திருப்பார் ஓர் ஆசனத்தலிருந்து,

"ஐயா எங்க ஐயா அங்க அங்க ஓடித்திரியுரிங்க பொடியன் மாதிரி. நானும் எங்க உங்களைக் காணவில்லையினுப் பார்த்தனான்? சரி ஒரோ இடத்திலதானே இறங்குவம் என்று பேசாம இருந்திட்டன். இந்தாங்க ஐயா இருங்க" சப்தம் வந்ததும் ஐயா சற்றேனத் திருப்பிப்பார்த்து,

"இல்லடா தம்பி நீ இரு உனக்கு காலும் ஏலாது" - எழும்புவதற்கு எத்தனித்த கனகரைத் தோளில் தட்டி எழும்பவிடாமல் தடுத்தார். ஐயாவின் சிறிய பை கனகரின் கரங்களுக்கு மாறிக்கொண்டது.

வீதியின் இரு மருங்கிலும் நீண்டு, வளர்ந்த நெடுமரங்கள் ஓடுவது போல் கனகரின் கண்களுக்குத் தென்பட்டன. வானளாவிய உயரத்திற்கு தேக்க மரங்கள் வளர்ந்திருந்தன. அந்த மரங்கள் - அடிப்பகுதிகள் - உழைத்து உழைத்துக் களைத்துப் போன புயங்கள் போல காட்சியளித்தன.

மாங்குளம் நகரில் 'மினி பஸ்' வந்து நின்றது. எல்லோரும் இறங்கினார்கள். ஆட்டோவிற்கு ஐம்பது ரூபாயுடன் ஐயா பாடசாலையை நோக்கிப் பயணமானார். கனகர் தான் வேலைசெய்யும் புடைவைக் கடைக்குச் சென்ற போது,

"என்ன கனகர் ஐயா இண்டைக்கு நேரத்திற்கு வந்திட்டீங்க" - கடைக்கார முதலாளி.

"இல்ல முதலாளி இண்டைக்கு எனக்கு லீவு வேண்டும்"

"ஏன்?"

"நான் முதல் சொன்னனான் வீடு ஒன்று வாடகைக்குப் பாத்திருக்கன் என்று"

"விசாரிக்க இண்டைக்குப் போகப் போறீங்களா?"

"ஓம்"

"நேற்று இரவு அந்த வீட்டுக்காரன் எங்கட வீட்டுக்கு வந்துட்டுப் போனான். அப்போ உங்கட வீட்டு விஷயம் பற்றி கேட்டான்"

"நீங்கள் என்ன சொன்னீங்க முதலாளி?"

" 'அவர் வீடு பார்க்க வருவார்' என்று சொன்னனான். கனகர் ஐயா நீங்க பக்கத்தில் வந்துட்டா எனக்கும் சுகம்தானே." - முதலாளி தனது வியாபர உள்நோக்கத்துடன் கூறினார்.

"போகட்டும்மா முதலாளி?"

"போயிட்டு வா"

"பார்த்த வீடு ஒரு கிலோமீற்றர் தூரம் வருமா?"

"ஓம், எப்படி போகப் போறீங்க ஐயா? இந்தாங்க நூறு ரூபாய் காசு. ஒரு ஆட்டோபிடிச்சுப் போங்க. உங்களுக்கு அஞ்சு நாள் சம்பளமும் தரக்கிடக்குது" பணத்தை நீட்டினார்.

10

"வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்..."

"ஜெஸ் கம் இன்" படலையைத் திறக்கிறான், வீட்டுச்சொந்தக்காரன்.

"வணக்கம் தம்பி, நான் கனகர் ஐயா"

"வணக்கம் எந்த கனகர் ஐயா"

"வெலிமடை முதலாளியிடைய கடையில் வேலை செய்யிறனான். நேற்று நீங்கள் முதலாளி வீட்ட.."

"ஓம்... ஓம் தெரியுது. கடையில் வைத்து, உங்களைக் கண்டு வருசக்கணக்காகுது"

"எங்க தம்பி ஒரு இடமும் வெளிக்கிட முடியாது. வேலை முடிஞ்சா பின்னேரம் முகாமுக்குப் போயே ஆகணும் பிள்ளைகள் பாவம். இப்ப பிள்ளைகள் வளந்திருச்சுகள்"

"சரி... சரி... நான் பசு மாட்டில் பால் எடுக்கப் போகணும் நேரமாகுது. நீங்கள் ஒருக்க வீட்டைச் சுற்றிப் பாத்திட்டு வாங்க பிடிச்சிருந்தா கதைப்பம்"

'எனக்கு இந்த வீடு கிடைப்பதே பெரிய புண்ணியம்' - மெதுவாக நடந்து வீட்டை நாலாபக்கமும் நோட்டமிட்டார்.

"வீடு பிடிச்சிருக்கு எவ்வளது மாத வாடகை?" - நடந்தவாறு

"உங்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கு. நான் வீடு குடுக்க மாட்டன். உங்களப் பாத்தா நல்ல ஆளா இருக்கிறீங்க? நானும் அடுத்த மாதம் பிள்ளைகளுக்கிட்ட வெளி நாட்டுக்குப் போறன். மாதம் ஆயிரம் ரூபாய்த் தாங்கோ மனசாட்ச்சிப்படி அதைவிட குறைக்க முடியாது. வேற எங்கையும் இப்படி லாபமா வீடு கிடைக்காது."

"முற்பணம் எவ்வளவு?"

"முதல் சொன்னது தான்"

"இருபதாயிரம் ரூபாய் தானா, கொஞ்சம் குறைச்ச நல்லம்?"

"தெரியும் இந்த காலத்தில் இப்படி வீடு கட்ட எவ்வளவு போகுமென்று?"

"இல்லை பிள்ளைகளின்ட படிப்புக்கு கொஞ்ச காசு வைச்சிருக்கன் அதை தந்துட்டு என்ன செய்யிறது?"

"உங்களுக்குத் தெரியுந்தானே கனகர் ஐயா, வன்னிக்கு கன காலமா சீமெந்து, முள்ளுக்கம்பி, டெயர், ரீயூப், யூரியா, பற்றரி, மண்ணணை, பெற்றோல்... இப்படியான பொருளேல்லாம் வவுனியா 'செக்பொயின்'ரால் கொண்டு வர அரசாங்கம் தட விதிச்சிருக்குது. அப்ப பாருங்க இப்படியான பொருளாதார தடைக்கு மத்தியில் இந்த வீட்டை எப்படி கஷ்டப்பட்டு கட்டியிருப்பன் என்று?"

"முற்பணத்த அரைவாசி, அரைவாசியா ஐந்து மாத தவணை அடிப்படையில் தரட்டுமா?"

"அது சரி வராது"

"இப்ப என்ர நிலை உனக்குத் தெரியுந்தானே"

"என்ன செய்வம்?"

"பாத்து செய் தம்பி"

"பிள்ளைகளும் படிக்க போகணும் என்று சொல்லுகிறாய்"

"பிள்ளைகளுக்காக வேண்டி தான் இப்படித் திரியுரன்"

"சரி கனகர் ஐயா ஒன்றும் வேண்டாம் எனக்கும் கொஞ்ச காசுத் தேவை இருக்கு. ஒரேடியா பதினைந்தாயிரம் ரூபாயைத் தாங்கோ. ஒரு கதையும் வேண்டாம்"

"ஓகே, எவ்வளவு காலத்திற்கு எழுதித் தாறீங்கள்?"

"நீங்கள் இருக்கும் மட்டும் இருங்கோ. காலப்போக்கில் உங்களுடைய பிள்ளைககள் ஒழைச்சு சொந்தமா வாங்கினாலும் பரவாயில்லை. மற்றது நான்வெளிநாட்டுக்குப் போன பிறகு கடிதத்தில் கணக்கு இலக்கம் அனுப்புவன். அந்த இலக்கத்திற்கு வாடைகைக் காசை போடுங்கோ"

"இந்தாங்கோ எண்ணிப் பாருங்கோ, சரியா இருக்குதா? என்று." - கனகர் தான் சிறுக சிறுக சேமித்து வைத்த பணத்ததை மேலங்கி 'பாக்கற்'றில் இருந்து ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களாக ஒரு கட்டுக் காசைக் கொடுத்தார்.

வீட்டு உரிமையாளரும் பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்துவிட்டு, "எல்லாம் கணக்காயிருக்கு. உங்களுக்கு பணம் வாங்குனதிற்கு அத்தாடசியாகவும் வீடு வாடைக்கு கொடுத்ததிற்கும் ஒரு காகிதம் எழுதித் தர வேண்டும்." - பேனையையும் பேப்பரையும் எடுத்து ஒரு தற்காலிக அத்தாட்சிக் கடிதத்தை எழுதி கொடுத்தார்.

அவரும் வாங்கி ஒரு கணம் தனது பார்வைரயச் செலுத்தினார்.

"சரி நான் போயிட்டு வரட்டுமா?"

"எப்ப குடி வரப்போறீங்க?"

"அடுத்த மாதம் பால் காய்ச்சிப் போட்டு வருவம்"

"சாமன்களை முதலில் கொண்டு வந்து இறக்குங்கள்"

"தம்பி எங்கள்களுக்கிட்ட பெரிசா சாமான்கள் இல்லை. பிள்ளைகளிண்ட புத்தகங்களும் உடுப்புக்களும் அதுகளுண்ட இரண்டு சைக்கிள்களும் கொஞ்ச ஆக்கி தின்னுகிற சட்டிப்பானைகளும் தான் கிடக்குது. அவற்றை வறேக்க பிள்ளைகள் சைக்கிள்ல மெது மெதுவாக கொண்டு வருங்கள்"

"உங்களுக்கு ஒரு ஹோலும் இரண்டு றூமும் ஒரு கிச்சினும் காணும் தானே"

"ஜெஸ்"

"அங்க அங்க என்ர சாமான்கள் கொஞ்சம் கிடக்குது. அதை நாளைக்கு அப்பறப்படுத்தி ஹோலுக்குப் பக்கத்தில் இருக்கிற பெரிய றூமில் போட்டுப் பூட்டிவைக்கிறன்."

"உங்கட விருப்பம். நாங்கள் கடைசி வரைக்கும் சொன்ன சொல் மாற மாட்டம். வீட்டையும் வளவையும் பத்திரமா பாதுகாப்பம்"

"அதுதானே இவ்வளவு காலம் ஒருத்தருக்கும் கொடுக்காம உங்களுக்குத் தந்திருக்கிறன்"

"அதுக்கு நான் வாழ் நாள் பூராகவும் உங்களுக்கு நன்றி உடையவனாக இருப்பன்"

"மற்றது ஐயா காணியில் மாங்காய், தேங்காய், புளி, கொய்யா, தேசிக்காய் இப்படியாக சில வரும்படிகள் கிடக்குது. அவற்றில் நீங்களும் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, மீதியை மாங்குளத்துச் சந்தையில் குடுத்து பணத்தை 'எக்கவுண்டு'க்குப் போடுங்க"

"நீங்க கஷ்டப்பட்டு வளர்த்த மரங்களிலிருந்து எங்களுக்கு சும்மா வேண்டாம். நாங்க எடுக்கிறதுக்கும் சேத்துப் பணத்தை அனுப்புகிறன்"

"இல்லை...இல்லை... வேண்டாம். நீங்கத்தானே இனி பராமரிக்கப்போறீங்க அதுக்கு கூலியாக எடுத்துக் கொள்ளுங்கள். பக்கத்தில் மூன்று ஏக்கர் வயல் காணியும் கிடக்குது பெரும் போகமும் சிறு போகமும் செய்யலாம். இயன்ற செய்தீங்க என்றால், ஒவ்வொரு வருடமும் உங்களுக்குச் சாப்பாட்டுக்கு நெல் வரும்."

"எல்லாம் வந்திருந்திட்டுப் பார்ப்போம்.




**தொடரும்...**



# கட்டாய மதமாற்றத்தை வந்தேறிகளான கிறிஸ்தவர்கள் செய்கின்றார்கள்

**இலங்கை கம்பன் கழகத் தலைவர், ஆன்மீகப் பேச்சாளர், கம்பவாரிதி ஜெயராஜ்**

**கேள்வி :- இலங்கையில் யுத்தத்தின் பின்னர் ஆன்மீகமும் அரசியலும் ஒன்றுடன் ஒன்று மோதவைக்கப்பட்டு மக்கள் மத்தியில் திட்டமிட்டு குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. இன்றைய இலங்கையின் இந்த நிலைமை குறித்து சைவ சமய ஆன்மீக பேச்சாளர், சமூக சேவையாளர் என்கிற ரீதியில் நீங்கள் இதனை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பதில் :- வணக்கம். பொதுவாக ஆன்மீகம் என்பது உலக மக்களை ஒன்றுபடுத்துவதற்கு கருவியாகக் கூடிய ஒன்று. ஆனால் மனித வக்கிரகங்கள் காரணமாக அந்த ஒன்றுபடுத்தக்கூடிய கருவியை பகைக்கான கருவியாக ஆக்க பலர் முயன்று கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் தான் நமது நாடு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. இதுவரை காலமும் போரினால் சில காலம் நாங்கள் அழிவுகளைச் சந்தித்தோம். இப்பொழுது மதத்தை வைத்து இனவாதம் செய்கிற அல்லது மக்களைப் பிரிக்கின்றதான ஒரு காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் பேரினமாக வாழக்கூடிய சிங்களவர்களும் இந்த காரியத்தைச் செய்கிறார்கள். அவர்களுடைய மதம் பௌத்த மதம். அந்த பௌத்த மதத்தை நாடு முழுவதும் கொண்டுபோய் திணிக்கவேண்டும் என்று. தானாக பரவுவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் ஒரு குறித்த மதத்தை. குறித்த இனத்துக்கிடையில் கட்டாயப்படுத்தித் திணிப்பது என்று வருகிற போது தான் அது சம்பந்தமான எதிர்ப்பும். அந்த இனங்களுக்கிடையிலான பகையும் உருவாகிறது. போருக்குப் பின் வடக்கிலும் கிழக்கிலும் என்று கூட நினைக்கிறேன். பௌத்த மதத்தைப் பரப்புவதற்கான அல்லது திணிப்பதற்கான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். யார் செய்கிறார்கள் என்று சரியாகத் தெரியவில்லை. எப்படிச் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் நினைக்கிற காரியம் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம். இந்த நாட்டில் இடையில் வந்த கிறிஸ்தவ சமயம். இஸ்லாம் சமயம். இஸ்லாம் சமயத்தைக் கூட இங்கே வாழ்ந்தவர்கள் என்று கூறலாம். கிறிஸ்தவ சமயத்தினர் தங்களது மதங்களுக்கு ஆள் பிடிக்கின்ற வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் கிறிஸ்தவர்கள். சைவர்கள். இஸ்லாமியர்கள் என இதுவரை காலமும் ஒன்றுபட்டு வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். இந்த மதமாற்ற முயற்சி என்பது அந்தந்த இனங்களுக்கிடையில் மெல்ல மெல்ல ஒரு பகையை வளர்க்கத் தொடங்கியிருக்கிறது. இது இந்த நாட்டுக்கு ஒரு நல்ல சகுனம் அல்ல என்று நான் நினைக்கிறேன். இந்த விடயங்கள் உடனடியாக தடுக்கப்பட வேண்டும். அதுதான் என்னுடைய கருத்து.

**கேள்வி :- ஒரு பக்கம் மிசனரிகள் இந்தியாவிலிருந்தும் வந்தன. அதேநேரம் கிறிஸ்தவ மதகுருக்கள் இங்கு வருகிறார்கள். மக்கள் மத்தியில் கூட்டங்களை வைத்து நற்சிந்தனைகளை கூறுகிறார்கள். இதேநேரம் அண்மையில் பாதிரியார் ஒருவர் சிவசேனை அமைப்பினால் திருப்பியும் அனுப்பப்பட்டார். அவர்களது ஆசீர்வாதக் கூட்டங்களும் நிறுத்தப்பட்டன. மறுபக்கத்தில் இந்தியாவின் RSS இன் தலைமையில் தான் இங்கிருக்கும் சிவசேனை அமைப்பு இயங்குகிறது என்கிற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது. இது தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

பதில் :- உண்மையில் கருத்துக்களைக் கூறுவதற்காகத்தான் இங்கே வருகின்றோம் என்று கூறுவதில் எனக்கு உடன்பாடில்லை. அது ஒரு பொய்மையான கருத்து அல்லது அது ஒரு முகமூடி என்று தான் நான் நினைக்கிறேன். அந்த அடையாளத்தை வைத்துக்கொண்டு அவர்கள் மதமாற்ற முயற்சியில் தான் ஈடுபடுகிறார்கள் என்பது வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்த ஒன்று. கிறிஸ்தவர்களைக் கூறுகின்றேன். எனக்கிருக்கும் ஆச்சரியம். இயல்பாக நடந்து கொண்டிருந்த ஒன்றில் ஏன் இந்த மாற்றம் நிகழ்ந்தது என்று தெரியவில்லை. கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரையிலே முறைப்படியாக ஒரு நிர்வாக ஒழுங்குள்ளதாக அந்த மதம் கருதப்படுகிறது. அடுத்தவர். அடுத்தவர். அடுத்தவர் என்று நிர்வாக ஒழுங்கு இருக்கிறது. ஒரு தவறு நடந்தால் அது கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் செய்கிறார்கள் என்று கூறி தப்பிக்கப்பார்க்கிறார்கள். திருக்கேதீச்சரத்திலே அலங்காரப் பலகையினை ஒரு பாதிரியார் தலைமையிலான ஒரு குழு போய்ச்சென்று உடைத்தது. அதுபோல வேறு சில சம்பவங்களும் அண்மையில் நடந்தன. வெடுக்குநாறியிலே அல்லது பல இடங்களில் நடக்கின்றது. அண்மையில் நடேசர் சிலை வைக்கின்ற போது ஒரு பாதிரியார் இவர்கள் சிவபூமி ஆக்கப்பார்க்கிறார்கள் என அறிக்கை வெளியிட்டிருந்தார். இவைகள் எல்லாம் கேட்டால் உடனே இது எங்கள் கருத்தல்ல கீழ் இருப்பவர்களின் கருத்து. இப்படிச் செய்து விடுகிறார்கள் என்று தப்பிக்கொள்கிறார்கள். ஆனால் இப்படியானதொரு சம்பவம் நடந்த பிறகு ஒருநாளும் மேலிடத்தில் இருக்கும் ஆயரோ அல்லது யாரோ ஒருவர் அந்த விசயத்தைக் கண்டித்ததாகவோ அல்லது அந்த விசயத்தில் ஈடுபட்டவரை தண்டித்ததாகவோ நாங்கள் யாரும் அறியவில்லை. ஆகவே எல்லோரும் இணைந்து செய்கிற செயற்பாடாகத்தான் நாங்கள் அனைவரும் நினைக்கின்றோம்.

இந்து மதத்தைப் பொறுத்தவரையில் மதம் பரப்புதல் என்பது இதுநாள் வரைக்கும் நம் நாட்டில் இருக்கவில்லை. பரம்பரையாக இங்கே இருந்தவர்கள் வழிபாடு செய்து கொண்டிருந்தார்கள். புதிய புதிய கோவில்களைக் கட்டினார்கள். இவைகள் தங்களுக்குள் செய்து கொண்ட வேலை. அண்மைக்காலமாகத்தான் சிவசேனா போன்ற அமைப்புக்கள் வந்து மாற்று சமயத்தவரின் எதிர்ப்புணர்ச்சியைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களை நான் குற்றம் கூறமாட்டேன். ஏனென்றால் மாற்றுச் சமயத்தவர்கள் எங்கள் சமயத்தை விழுத்த முற்படுகிற போது நம் சமயத்தவர்களும் ஏதாவதொரு வகையில் அதை எதிர்க்க வேண்டும் என்று நினைக்கிற நினைப்பு பிழை என்று கூறுவதற்கில்லை. ஆனால் அதில் எனக்கு உடன்பாடில்லை. எங்களுடைய சைவ சமயம் இறைவனை நம்பி அமைக்கப்பட்ட சமயம். இதற்கு முன்பும் பெரிய பெரிய எதிர்ப்புக்கள் எல்லாம் நம் சமயத்திற்கு வந்திருக்கின்றன. திருஞானசம்பந்தரின் காலத்தில் எல்லாம் பாண்டிய நாட்டையே மாற்றினார்கள். சமண சமயத்திற்கு மாற்றினார்கள். பெரிய கூட்டமாக குழுவாகச் சேர்ந்து அதைச் செய்தார்கள். ஆனால் அதனை ஒரு ஒற்றைப்பிள்ளை. திருஞானசம்பந்தப் பிள்ளை ஒரு விபூதியினைப் பூசியதன் மூலமாகவே பாண்டிய நாட்டை சைவ சமயத்திற்கு மாற்றிவிட்டு வந்தார். இழக்கப்பட்டிருந்த பாண்டிய நாட்டை மீட்டெடுத்தார். ஒருவனாக மீட்டெடுத்தார். அதுவும் இறைவனை நம்பியே அந்தக் காரியத்தினைச் செய்தார். இப்படித்தான் சைவ சமயம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே என்னைப் பொறுத்தவரையில் இந்த RSS அமைப்புக்கள் எல்லாம் தேவையில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் அவர்கள் கூறுவார்கள் எங்களது சமயத்தை விழுங்கப்பார்க்கிறார்கள். அதனைத் தடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினால் தர்க்க ரீதியாக அதனை யாரும் மறுக்க முடியாது. அதுதான் உண்மை நிலை. ஆனால் எல்லாச் சமயத்தவர்களும் நினைக்க வேண்டிய ஒன்று இருக்கிறது. இதனால் நடக்கப்போவது என்னவென்றால் எல்லோரும் அழியப்போகிறோம். ஏற்கனவே ஒரு பெரிய எதிரி நமக்கு எதிராக நம் இனத்தையே விழுங்கி விட வேண்டும் என்று இருக்கிற போது. மதத்தை வைத்து எமது இனத்தைக் குழப்பிக்கொண்டோமேயானால் அந்த எதிரி உள்நுழைவதற்கு அது மிகப்பெரிய வாய்ப்பாக ஆகிவிடும். இதை நம்மவர்கள் உணர வேண்டும். நம் சமயத்தினுடைய பெரியவர்கள். எல்லாச் சமயத்தின் பெரியவர்களும் ஒன்றிணைந்து ஒரு கூட்டத்தை நடாத்தி இத்தகைய காரியங்கள் செய்யக்கூடாது என்பதில் ஒரு உடன்பாடு காண வேண்டும். அவ்வாறு இதைச் செய்யாமல் விட்டால் நாமும் அழிந்து நம் இனமும் அழியவேண்டிய சூழல் உருவாகும் என்று கருதுகிறேன்.

**கேள்வி :- இலங்கையிலே பிராமணர்கள் அதாவது ஐயர் என்று கூறப்படுவோர் பல சங்கங்களை வைத்து குழுவாக இயங்குகிறார்கள். அவர்கள் இவ்வாறு சைவ சமயத்திற்கு ஆபத்து வருகிற போது முன்னிற்பதில்லை என்கிற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. திருக்கேதீஸ்வர வளைவு உடைப்பு ஒரு பாதிரியார் தலைமையில் கண்முன்னே நடந்து இரு வருடங்களைக் கடந்து விட்ட போதிலும் குற்றவாளிகளுக்கு பிணை தான் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. இந்த பிரச்சினை ஏற்பட்டபோதும் குறித்த ஐயர்மார்களின் சங்கங்கள் முன்னிற்கவில்லையே.**

பதில் :- அவர்களுக்கு இது வேலையில்லை என்று கருதுகிறேன். இந்து மதத்தைப் பொறுத்தளவிலே அந்தணர்கள் ஆலயக் கிரியைகளுக்குப் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள். சமயத்திலே ஈடுபடுகிறவர்களுக்கு அரசியலில் ஈடுபடத் தேவையிருக்கவில்லை. அவர்கள் தங்களது சமய வழிபாட்டினை கிரியைகளை சரியாகச் செய்வது என்று தான் பொதுவாக சைவ சமயத்தவர்கள் நினைக்கிறார்கள். அந்தணர்கள் இந்த விடயங்களுக்குள் ஈடுபடத் தொடங்கினால் இந்தப் போராட்டங்கள் இன்னும் கூர்மையுறும். பாதிரிமார்களா? அந்தணர்களா? என்று இந்தப் பகை இன்னும் வளரும். ஆகவே அந்தணர்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபடாமல் இருப்பது பரவாயில்லையோ என்று தான் எனக்குப் படுகிறது. அவர்களுடைய வேலையை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் அரசியலுக்குள் இழுத்து இந்த சமயப் பகைக்குள் இழுத்து கோவில் தோறும் இந்தப் பகை உண்டாகவேண்டுமானால் அது பெரிய ஆபத்தான சூழ்நிலையாக முடியும். பாதிரியார்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் இத்தகைய பகைக்கு வழிகாட்டுகிறார்கள் என்று தானே நாங்கள் குற்றம் சாட்டுகின்றோம். அதே செயலை நம்மவர்களும் ஏன் செய்ய வேண்டும் என்று தான் நான் நினைக்கிறேன்.

**கேள்வி :- நல்லாட்சி அரசிலே ஆயிரம் பௌத்த விகாரைகளை அமைப்பது என்பது அவர்களின் நிகழ்ச்சிநிரல். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு உடன்பாடு என்று தான் கூறப்படுகிறது. இன்று வடக்கு கிழக்கில் மிக வேகமாக பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு வருகிறது. தமிழ் மக்களது வணக்கஸ்தலங்களைக் குறிவைத்து இல்லாமல் அழித்து விட்டு பௌத்த விகாரைகளை உயரமான மலைப் பிரதேசங்களில் அமைத்து வருகிறார்கள். இது ஒரு பௌத்த ஆக்கிரமிப்புதானே?**

பதில் :- நிச்சயமாக அது பௌத்த ஆக்கிரமிப்புத்தான். அதில் சந்தேகத்திற்கிடமில்லை. ஆயிரம் பௌத்த விகாரைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உடன்பாடு என்கிற கருத்து தொடர்பில் நான் அறியவில்லை. அக்கருத்தினை ஆமோதித்து நான் பதில் கூறமாட்டேன். நாடு முழுவதும் பௌத்தம். பௌத்த விகாரை அமைக்க வேண்டும் என்கிற தன்மை இந்த பெரும்பான்மை சமூகத்திடம் இருக்கிறது. அதாவது சிங்கள பௌத்த அரசு என்று தான் அவர்கள் கூறவிரும்புகிறார்கள். இனத்தையும் மதத்தையும் இணைக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு ஒன்று புரியவில்லை. புத்தர் என்பவர் நம் இந்து மதத்தின் வேரிலிருந்து புறப்பட்ட ஒருவர் தான். அவர் தனி ஒரு ஆள் அல்ல. சித்தார்த்தன் என்பவர். அவர் இந்து மதத்தினைச் சேர்ந்தவர் என்று தான் கூறுகிறார்கள். ஆகவே எது தாய் மதமோ அதற்கு எதிராகவே அவர்கள் செயற்படுகிறார்கள் என்பதை அவர்களாகவே புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் பேரினம் என்கிற வகையில் அவர்களிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. நாங்கள் சிலையை அமைக்கிறோம் என்று அவர்கள் கூறுவார்கள். அண்மையில் பண்ணையில் கூட நடந்தது. நாங்கள் போய் சிலையை அமைத்தால் பொலிஸ் போய் வழக்குப் போடுகிறது சிலையை அகற்றவேண்டும் என்று. ஆனால் வீதி தோறும் அமைக்கப்பட்டுள்ள பௌத்த சிலைகளை அகற்றவேண்டும் என்கிற வழக்குப்போட்டால் அப்போது என்ன பதில் கூறுவார்கள் என்பது பிரச்சினைக்குரிய விடயம். அவர்கள் ஒருவேளை நாங்கள் அரசிடம் அனுமதி பெற்றுத்தான் சிலைகளை நிறுவுகிறோம் என்று கூறுவார்கள். அது ஒரு வேடிக்கையான விடயம். அரசாங்கம் அவர்களின் கையில் இருக்கிற போது அரசாங்கம் அனுமதிப்பத்திரத்தை அவர்களுக்கு வழங்குவார்கள். ஆனால் நம்முடைய மதத்தவர்களுக்கு அவ்வாறு கொடுக்கமாட்டார்கள். நம்முடைய மதத்தவர்களுக்கு அப்படித்தேவையுமில்லை. எங்களது மதத்திலும் ஆரம்பித்திருக்கிறார்கள் வீதி தோறும் சிலை வைக்கப்போகிறோம் என்று. அதிலும் எனக்குப் பெரிய உடன்பாடு இல்லை. இந்து மதம் ஒரு சுயமான மதம். அந்த மதத்திற்கென ஒரு நிமிர்வு உண்டு. அதனுடைய செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் செயற்படுவார்களே தவிர மற்றவர்களுடைய செயற்பாடுகளைப் பார்த்து இந்து மதம் செயற்பட வேண்டிய அவசியம் இல்லை. எங்களுடைய கோவிலிலே கொடியேற்றம் என்றால் இன்று கிறிஸ்தவர்கள் கொடியேற்றம் என்கிறார்கள். அவர்களுடைய மதத்திலே எங்கிருந்து கொடியேற்றம் வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. கூடுசுற்றுகிறது என்கிறார்கள். சாமி சுற்றுதல் என்பது எமது மதத்தின் விடயம். இவையெல்லாம் எங்கள் மதத்திலிருந்து அவர்கள் கடன் வாங்கிக்கொண்ட விடயங்கள். ஆகவே எங்களைப் பார்த்து அவர்கள் செய்கின்ற போது அவர்களைப் பார்த்து நாங்கள் செயற்படக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்து மதத்தைப் பொறுத்தவரையில் action தான் அதன் உரிமை. Reaction தேவையில்லை. மற்ற மதங்களைப் பார்த்து நாங்களும் செய்தால் நாம் இறங்கிவிட்டதாக அர்த்தமாகிவிடும். ஆகவே அவர்கள் செய்கிற மதப்பிரச்சாரம் அல்லது சிலை நிறுவுதல் என்பதெல்லாம் ஒரு விளையாட்டு விடயமாகத்தான் இருக்கப்போகிறது. அதனால் எதுவும் நடக்கப்போவதில்லை. இந்த சிலைகளைப் பார்த்து ஒரு சிலர் தம் மதத்தில் வந்து இணையலாம் என்று அவர்கள் நினைக்கலாம். பெரும்பாலும் வடக்கு கிழக்கில் அது நடப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று தான் நான் நினைக்கிறேன். ஏனென்றால் இந்து மதத்திலே பல காலம் ஊறித் திளைத்த மக்கள் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்து மதத்தின் ஆழம் தெரியும். அவர்கள் பரம்பரை பரம்பரையாக வழிபட்டவர்கள். ஆகவே சிலை நிறுவுவதால் எமது மதத்தை அழிக்கலாம் என்று கருதுவது மிகப்பெரிய தவறு.


தொடரும்...

நேர்காணல் : இரணியன்

# இந்தியாவை உளவு பார்க்க இலங்கையில் "ரேடார்"

# சீனாவின் திட்டம் அம்பலம்

இரணியன்



இந்திய இராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் இலங்கையினுள் ரேடார் தளத்தை அமைக்க சீனா முன்வந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அந்த செய்தியை சீனா இதுவரையிலும் மறுக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இலங்கையின் தளத்தைத்தையும் கடற்பரப்பையும் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் வைத்துக்கொள்வதற்கு சீனா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை ஒன்றும் புதிதல்ல. அத்துடன் இது முதல் தடவையும் அல்ல. 2022 ஒகஸ்ட் இல். சீன உளவுக் கப்பலான 'யுவான் வாங்-5' ஹம்பாந்தோட்டையில் நிறுத்தப்பட்டது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பெரிய இராஜதந்திர மோதலை உருவாக்கியது. இலங்கை கடற்பகுதியும் உள்ளடங்கிய பகுதியில் இந்திய கடற்படையின் மூலோபாய கண்காணிப்பினை கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ரேடார் தளம் மேற்கொள்ளப்படுவதாக வெளிநாட்டு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட ரேடார் அமைப்பு. பிராந்தியத்தில் புதுடெல்லியின் மூலோபாய நடத்தையை கண்காணிக்கும் அதேவேளையில். இந்திய கடற்படையின் செயற்பாடுகளை கண்காணிப்பதில் கவனம் செலுத்தும் என்று **Economic Times** தெரிவித்துள்ளது. கொழும்பில் இருந்து தென்கிழக்கே சுமார் 155 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலங்கையின் தெய்வேந்திர முனையை அண்மித்த பகுதியில் இந்த திட்டம் நிறுவப்படவுள்ளது என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீன அறிவியல் அகடமியின் **Space Information Research Institute** இதற்கு தலைமை தாங்குவதாக வெளிநாட்டு செய்திகள் கூறுகின்றன. தேவேந்திர முனையில் இருந்து தென்மேற்கே 1.700 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள டியாகோ கார்சியாவில் உள்ள இராணுவ தளத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்கும் திறன் உத்தேச ரேடாருக்கு இருப்பதாகவும் தொடர்புடைய தகவல்கள் தெரிவிக்கின்றன. அறிக்கையின் படி. ரேடார் அமைப்பு சீனாவால் வெற்றிகரமாக நிறுவப்பட்டால். அது முன்மொழியப்பட்ட ரேடார் வரம்புக்குள் உள்ள இந்திய இராணுவ மையங்களை மோசமாக பாதிக்கும்.

இலங்கையில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள சீன கண்காணிப்பு மையம் அதன் கிழக்கில் உள்ள அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் எல்லையில் செயற்பட முடியும். மியன்மார் மற்றும் இலங்கையில் சீனாவின் இரட்டை பயன்பாட்டு வசதிகள் இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகள் மற்றும் கவலைகளை எழுப்புகின்றன. பிராந்தியத்தில் விரிவடைந்து வரும் பெய்ஜிங்கின் தரை நிலையங்கள். இந்திய சொத்துக்கள் பற்றிய முக்கியமான தகவல்களை இடைமறிக்கப் பயன்படுத்தப்படலாம் என்று ஆதாரங்கள் கூறுகின்றன. மியன்மாரில் உள்ள கோகோ தீவுகளில் ஓர் இராணுவ வசதியை நிர்மாணிப்பது மற்றும் இலங்கையில் முன்மொழியப்பட்ட தொலைநிலை செயற்கைக்கோள் பெறுதல் தரை நிலைய அமைப்பு இரண்டும் சீனாவின் உதவியுடன் வருவதால். பிராந்தியம் முழுவதும் சாத்தியமான கண்காணிப்பு குறித்து இந்தியாவில் கவலைகளை எழுப்பியுள்ளது. இந்தியாவின் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுச் சங்கிலிக்கு மிக அருகில் அமைந்துள்ள கோகோ தீவுகளில் இராணுவ தளம் கட்டப்படுவதை சமீபத்திய செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன. சீன அறிவியல் அகாடமியின் கீழ் உள்ள விண்வெளி தகவல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தென்னிலங்கையில் உள்ள ருஹுனு பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியின் மூலம் தொலைதூர செயற்கைக்கோள் பெறும் தரை நிலைய அமைப்பை அமைக்க சீனா முன்மொழிந்துள்ளதாக இரண்டாவது ஆதாரங்கள் தெரிவித்தன. அதன் முக்கியமான இடத்தைக் கருத்தில் கொண்டு. இது இந்தியாவின் படைத்தளங்களை உளவு பார்க்கவும். முக்கியமான தகவல்களை இடைமறிக்கவும் மற்றும் பிராந்தியம் முழுவதும் பயன்படுத்தப்படலாம் என்று பாதுகாப்பு ஸ்தாபனத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கோகோ தீவுகளில் முழுக்க முழுக்க சீனர்களால் கட்டப்பட்ட முழுமையான இராணுவ தளம் என்று நம்பப்படுகின்றது. பாதுகாப்பு அமைப்பில் உள்ள உளவுத்துறை உள்ளீடுகளை ஓர் ஆதாரமாக குறிப்பிட்டு. பெயர் தெரியாத நிலையில் மேற்கோளிட்டு காட்டியுள்ளது என இந்திய செய்தி தெரிவிக்கின்றது. சமீபத்தில் செயற்கைக்கோள் படங்கள் மூலம் தீவில் ரேடோம் ஜரேடார்களைப் பாதுகாக்க குவிமாடம் வடிவ அமைப்பு காணப்பட்டது என்றும் அந்த ஆதாரம் கூறியுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 175 மீற்றர் நீளம் மற்றும் சுமார் 8 மீற்றர் அகலமுள்ள புதிய பாலத்தைப் பயன்படுத்தி தீவை தெற்கு நிலப்பரப்புடன் இணைக்கிறது என்றும் அதில் தெரிவிக்கப்படுகின்றது. தேவைப்படும் போது இந்த வசதியை சீன இராணுவம் எப்போதும் பரந்தளவில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. லண்டனைத் தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான சாதம் ஹவுஸ். மாக்சர் டெக்னாலஜிஸின் ஜனவரி 2023 இன் செயற்கைக்கோள் படங்களின் அடிப்படையில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இது மூலோபாய தீவுக்கூட்டத்தில் பெரிய அளவிலான கட்டுமான நடவடிக்கைகளைக் காட்டியது. "தெரியும் வகையில் இரண்டு புதிய ஹேங்கர்கள். ஒரு புதிய காஸ்வே மற்றும் தங்குமிடத் தொகுதியாகத் தோன்றுவது. இவை அனைத்தும் புதிதாக நீளமான 2.300-மீட்டர் ஓடுபாதை மற்றும் ரேடார் நிலையத்திற்கு அருகாமையில் தெரியும். தீவுகளை இணைக்கும் தரைப்பாதைக்கு அப்பால், கிரேட் கோகோவின் தெற்கு முனையில் காணப்படுவது. வரவிருக்கும் கட்டுமானப் பணிகளைக் குறிக்கும் நிலத்தை அகற்றும் முயற்சிகளின் சான்றாகும்" என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1990 களில் இருந்து சீனா ஒரு சிக்னல் உளவுத்துறை வசதியை இயக்கியதாக செய்திகள் வந்துள்ளன. செயற்கைக்கோள் கண்காணிப்பு வசதிகள் இயல்பாகவே இரட்டைப் பயன்பாட்டில் இருப்பதைக் குறிப்பிட்டு. சீன சிவில் விண்வெளித் திட்டம் சீன இராணுவத்துடன் நெருக்கமாகச் செயல்படுவதாக அறியப்படுகிறது என்று வட்டாரங்கள் தெரிவித்தன.பிராந்தியத்தில் சீனாவின் விரிவடைந்து வரும் தரை நிலையங்கள். இந்திய சொத்துக்கள் பற்றிய முக்கியமான தகவல்களை இடைமறிக்கப் பயன்படுத்தப்படலாம் என மற்றொரு தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்தியாவின் செயற்கைக்கோள் ஏவுதள வசதிகள் மற்றும் ஒடிசாவில் உள்ள ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை வரம்பு ஆகியவை தரை நிலையத்தின் ஸ்கேனரின் கீழ் வரக்கூடும் என்றும். அங்கிருந்து ஏவுதல்கள் பற்றிய முக்கியமான தரவுகளைப் பெற கண்காணிக்க முடியும் என்றும் அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது. சீனா- தென் அமெரிக்காவில் தரை நிலையங்களின் வலையமைப்பை விரிவுபடுத்துகிறது. அண்டார்டிகாவில் அத்தகைய நிலையத்தை அமைப்பதாக பெப்ரவரியில். அறிவித்தது. இலங்கையின் ஹம்பாந்தோட்டையில் சீன ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக் கப்பல் ஒன்று சேர்ந்துள்ளதைக் குறிப்பிடுகையில். பிராந்தியத்தில் முக்கிய தகவல்களைச் சேகரிப்பதற்காக நிலையங்கள் அத்தகைய கப்பல்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வாய்ப்புள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

எடுத்துக்காட்டாக. விண்வெளி கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு கப்பல்கள் தரை நிலையங்கள் போன்ற பல செயல்பாடுகளைச் செய்ய முடியும். மேலும் இயக்கத்தின் கூடுதல் நன்மையுடன். ஆதாரம் குறிப்பிட்டது.

எடுத்துக்காட்டாக. 2017 இல் ஒன்லைனில் வந்த அர்ஜென்டினாவின் நியூக்வெனில் உள்ள **Espacio Lejano** மைதானம் 2012 இல் முன்மொழியப்பட்டதில் இருந்து கவனத்திற்கும் சர்ச்சைக்கும் உட்பட்டது. சீனாவின் விண்வெளித் திட்டம் குறித்த அறிக்கையின்படி யூ.எஸ். திங்க் டேங்க் சென்டர் ஃபார் ஸ்ட்ராடஜிக் அண்ட் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் (சிஎஸ்ஐஎஸ்). அர்ஜென்டினாவுக்கும் சீனாவிற்கும் இடையிலான ஒப்பந்தம். அர்ஜென்டினா "தலையிடவோ அல்லது குறுக்கிடவோ வேண்டாம்" என்று கூறுகிறது. இது உளவு பார்க்கும் சந்தேகங்களை மட்டுமே தூண்டியது.

சீன உளவுக் கப்பலான 'யுவான் வாங்-5' ஹம்பாந்தோட்டையில் ஒகஸ்ட் 2022 இல். நங்கூரமிடப்பட்டது. இது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பெரிய இராஜதந்திர மோதலை உருவாக்கியது. நவம்பரில். மற்றொரு கப்பலான 'யுவான் வாங்-6' இந்தியப் பெருங்கடல் பகுதிக்குள் நுழைந்தது. இது திட்டமிடப்பட்ட இந்திய நீண்ட தூர ஏவுகணை ஏவுதலுடன் ஒத்துப்போகிறது. ஆனால் ஏவுகணை ஏவுதல் ஒத்திவைக்கப்பட்டது மற்றும் ஏவுகணை சோதனையின் போது கப்பல் மீண்டும் இந்தியப் பெருங்கடல் ரிம் இல் நுழைந்தது. இந்நிலையில். யாழ்ப்பாணம். கிளிநொச்சி. முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் ஓர் மிகப்பெரும் இராணுவத் தளத்தை சீனா விரைவில் அமைக்கவுள்ளது. இலங்கையின் வடக்கு மாகாணத்தின் 3 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையிலான நிலப்பரப்பரப்பில் 150 ஏக்கர் நிலம் இதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ள இடம் யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணிக்கும் சமயம் இயக்கச்சி சந்தியில் ஆணையிறவு நோக்கி திரும்பும் சமயம் கிழக்கே ஓர் மண் பாதை பயணிக்கின்றது. இவ்வாறு பயணிக்கும் மண் பாதையில் இயக்கச்சி சந்தியில் இருந்து 7 மைல் தூரம் பயணித்தால் அங்கே சுமார் 700 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் மிகப் பெரிய இராணுவ முகாம் ஒன்றை இலங்கை இராணுவத்தினர் தற்போது அமைத்துள்ளனர். அதன் அருகே உள்ள 150 ஏக்கர் நிலமே இவ்வாறு சீனப் படைகளின் கண்காணிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக வழங்கி அதன் பாதுகாப்பிற்காக சுற்றுப் புறத்தில் இலங்கை இராணுவமே நிலைகொள்ளவுள்ளதனால் அப் பகுதிகள் அனைத்துமே இலங்கை இராணுவத்தின் முகமாகவே காட்சியளிக்கும். இந்த 150 ஏக்கர் முடிவடையும் இடத்தில் இருந்து 800 மீற்றர் தூரத்திற்கும் உட்பட்ட பகுதியில் கடலும் உள்ளது. இங்கே அமைக்கும் சீனாவின் கண்காணிப்பு நிலையத்திற்கு வந்து செல்லும் சீன நாட்டவர்கள் எவரும் நகரின் மத்தியின் ஊடாகவோ அல்லது பிரதான வீதிகள் வழியாகவோ பயணிக்காது இரகசியமாக பயணிப்பதற்கான வழிவகையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய இங்கே தளம் அமைக்கும் சீனப் படையினர் கொழும்பில் இருந்து விமானம் மூலம் இரணைமடு விமான நிலையத்தை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகின்றது.

இரணைமடு விமான நிலையம் என்பது இரணைமடுக் குளத்திற்கு கிழக்கே உள்ளது. இது வடக்கே அம்பகாமம். தெற்கே கரிப்பட்டமுறிப்பு. மேற்கே இரணைமடுக் குளத்திற்கு நடுவே 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள விமானப்படைத் தளமாகும். இந்த 8.000 ஏக்கரில் 3.000 ஏக்கரும் சீனாவின் பயன்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது. இவ்வாறு இரணைமடு விமானத்தளத்தில் இறங்கும் சீன நாட்டவர் அம்பகாமம். வட்டக்கச்சி ஊடாக தர்மபுரம். வெளிக்கண்டலிற்கு பயணித்து இந்த 150 ஏக்கர் தளத்தை மிக இரகசியமாக அடைய முடியும். இதற்காக 30 கிலோ மீற்றர் தூரம் கூட பயணிக்க வேண்டிய அவசியமே கிடையாது. இதனால் யாழ்ப்பாணம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு எல்லையில் அமையும் கடல். ஆகாயம் மற்றும் தரைக் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவிலேயே இந்தியா இருக்கின்றது. இதனால் இங்கே அமையும் சீனக் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து இந்தியாவே குறிவைக்கப்படலாம் எனத் திடமாக நம்பப்படுகின்றது. இதனால் இந்த தளத்தினால் இலங்கைக்கு ஏற்படும் ஆபத்தினைவிடவும் இந்தியாவிற்கே பெரும் ஆபத்து காத்திருக்கின்றது.



# பொட்டம்மானை இரகசியமாக கண்காணித்த கருணா!



## இறுதியுத்தத்தில் நடந்தது என்ன?

கிழக்கு பிளவிற்கு உண்மையில் தத்துவார்த்த அர்த்தங்களோ, கொள்கை ரீதியான காரணங்களோ கிடையாது. அது கருணா என்ற தனி மனிதனின் முரண்பாடு. பிளவின் பின்னரே அதற்கு தத்துவார்த்த அர்த்தங்களை உருவாக்க முயன்றார்கள். இதை உருவாக்கியதில் சிவராம் முக்கியமானவர். (சிவராமிற்கு புலிகள் மாமனிதர் கௌரவம் வழங்கியதும் இந்த மோதலின் தொடர்ச்சிதான்) மற்றதெல்லாம், அரசினால் இரகசியமாக இதற்காக ஒழுங்கு செய்யப்பட்டவர்கள். அவர்களை பற்றிய விபரங்களையெல்லாம் இந்த பகுதியில் சொல்வோம். தன்முனைப்பு (**Eco**) தான் இந்த பிளவின் பின்னணி காரணி. அற்புதன் மாஸ்ரர் மீதான தாக்குதலிற்கு முன்னர் இன்னொரு சம்பவமும் நடந்தது.

கிழக்கு அணிகள் வன்னியிலிருந்து மீண்டும் கிழக்கிற்கு திரும்பியிருந்த சமயத்தில், கிழக்கு பல்கலைக்கழகத்திற்குள் ஒரு உள்வீட்டு மோதல் ஏற்பட்டது. அடுத்த துணைவேந்தர் யார் என்ற போட்டி ஏற்பட்டது. அதிகார போட்டி ஏற்படுமிடங்களில் மனித மனங்கள் விதவிதமான சூழ்ச்சி பொறிகளை ஏற்படுத்தும். அதிலும் படித்தவர்கள் என நமது சமூகத்தில் கௌரவமாக பார்க்கப்படுபவர்கள், தமது நலன்களிற்காக எந்தவகையான சூழ்ச்சிக்கும் தயாராக இருப்பார்கள் என்பதற்கு கிழக்கு பல்கலைகழக சம்பவம் உதாரணம். 2000களில் கிழக்கு பல்கலைகழகத்தில் துணைவேந்தருக்கான போட்டி ஏற்பட்டது. இந்த போட்டியில் சம்பந்தப்பட்டவர்களை நாம் பெயர் குறிப்பிடாமல் தவிர்த்து விடுகிறோம். அப்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலர் கிழக்கு பல்கலைகழகத்தில் அதிகாரம் செலுத்தும் நிலையில் இருந்தனர். கிழக்கை சேர்ந்த சில விரிவுரையாளர்களும் துணைவேந்தர் பதவியை குறி வைத்தனர். இந்த சமயத்திலேயே முதன் முதலாக வடக்கு, கிழக்கு பிளவுக்கான அத்திவாரம் இடப்பட்டது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் துணைவேந்தர் பதவிக்கு வராமல் தடுப்பதற்காக, கிழக்கை சேர்ந்தவர்கள்தான் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தராக வர வேண்டுமென்ற பிரச்சாரத்தை ஆரம்பித்தார்கள். இது வடிவ மாற்றம் பெற்று, வடக்கிலுள்ளவர்கள் கிழக்கு மக்களை சமமாக மதிப்பதில்லை, கிழக்கின் அதிகாரபீடங்களையும் வடக்கிலுள்ளவர்களே ஆக்கிரமித்துள்ளனர் என்ற ரீதியில் பிரசாரப்படுத்தப்பட்டது. கிழக்கு துணைவேந்தர் சிக்கலை இரண்டு அணிகளும் விடுதலைப்புலிகளிடம் எடுத்து வந்தன. கிழக்கை சேர்த்தவர்கள் கருணாவை சந்தித்து, கிழக்கு துணை வேந்தர் வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் புலனாய்வுத்துறையின் மட்டக்களப்பு தலைவர்களை சந்தித்து பேசினர். அற்புதன் மாஸ்ரர், மனோ மாஸ்ரர் போன்றவர்களுடனேயே இந்த பேச்சுக்கள் நடந்தன.

கிழக்கு பல்கலைகழக துணைவேந்தர் மோதல் பற்றிய செய்திகள் அப்பொழுது ஊடகங்களிலும் வெளியாகியிருந்ததால், அதை விலாவாரியாக குறிப்பிடாமல் விட்டு, அந்த சமயத்தில் வெளியில் வராமல் இருந்த உள்ளக தகவல்களை மட்டும் சொல்கிறோம். யாழ்ப்பாணத்தை சேர்ந்த விரிவுரையாளர்கள், மட்டக்களப்பில் உள்ள புலனாய்வுத்துறை பொறுப்பாளர்களை சந்தித்து பேசும் விடயத்தை அறிந்ததும், கருணா ஒருமுறை அவர்களை நேரில் அழைத்து எச்சரிக்கையும் விட்டிருந்தார். கருணாவிடம் இருந்த போராளிகளின் எண்ணிக்கைதான் அவரை தன்னிச்சையாக நடக்க வைக்கிறது என்பதும் புலிகளிற்கு தெரியும். என்றாலும், கருணா விடயத்தில் அவசரப்படாமல், நிதானமாக செயற்பட முடிவெடுத்தார்கள்.

இந்த சமயத்தில் கிழக்கில் கருணா அணியினர் நடத்திய கட்டாய ஆட் சேர்ப்பையும் நினைவூட்டுகிறோம். 2001 இல் மட்டக்களப்பில் கருணா கட்டாய ஆட்சேர்ப்பை ஆரம்பித்தார். விடுதலைப்புலிகள் அமைப்பு கட்டாயமாக இள வயதினரை படையில் இணைத்த முதலாவது சந்தர்ப்பம் இது தான். இது ஏன் நடந்ததென்பது தெரியுமா? பலரும் நினைக்கிறார்கள், இது புலிகளின் தலைமையின் சம்மதத்துடன் நடந்ததென. அதற்கு வசதியாக ஒரு கதையையும் உருவாக்கி உலாவவிட்டுள்ளனர். அந்த கதையை முதலில் குறிப்பிடுகிறேன். கட்டாய ஆட்சேர்ப்பு விடயம் சர்வதேச அளவில் விமர்சனத்திற்குள்ளாக தொடங்க, கருணாவை புலிகள் வன்னிக்கு அழைத்தார்களாம். கட்டாய ஆட்சேர்ப்பை நிறுத்துமாறு மற்ற தளபதிகள் சொல்ல, “தலைவருக்கு ஏதேனும் பிரச்சனையென்றால் ஐயாயிரம் போராளிகளுடன் வருவேன். அதற்கு தயாராக இருக்கிறேன். நீங்கள் என்ன செய்தீர்கள்?” என கேட்டாராம். இதை கருணா பிரிந்த பின்னர் அவருக்கு ஆதரவான யாரோ கிளப்பி விட, ஒரு சுற்று சுற்றி வந்துள்ளது. உண்மையில் அப்படியொரு சம்பவமே நடக்கவில்லை. கருணா கட்டாய ஆட்சேர்ப்பை ஆரம்பித்ததே விடுதலைப்புலிகளிற்கு நெருக்கடி கொடுக்கத்தான்! இது பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் உண்மை அது தான். அதை விளக்கமாக சொல்கிறேன். அப்போது அதன் பின்னணி விளக்கமாக புரியும். விடுதலைப்புலிகளின் கட்டமைப்பிற்குள் இனி கருணா செயற்படுவது சிரமம், அவர் தனித்து செயற்பட விரும்புகிறார் என்பதை 1999, 2000களிலேயே பிரபாகரன் துல்லியமாக கணித்து விட்டார். வன்னிக்குள் படைத்துறை, நிர்வாக கட்டமைப்புக்களை கருணா கடைப்பிடிக் காமல் விட்டது. அவரை கிழக்கிலேயே செயற்பட அனுப்பிவிடுவோம் என பிரபாகரன் 2000 இல் முடிவெடுத்து அனுப்பினார். கிழக்கிற்கு கருணா வந்ததும், அவர் தனித்து இயங்குவதற்கான அத்திவாரங்களை இட தொடங்கி விட்டார். விடுதலைப்புலிகளிற்கு எப்பொழுதாவது சவால் அளிக்கலாமெனில், அது தன்னிடமுள்ள ஆளணி எண்ணிக்கையை வைத்து தான் என்பது கருணாவிற்கு நன்றாக தெரியும். போரிடும் ஆற்றலுள்ள பெரிய படையணிகளை கட்டியமைத்தால், புலிகளை தவிர்த்து தன்னால் தனித்து இயங்க முடியுமென அவர் நம்பினார். கணிசமான படையணிகளை உருவாக்கினால், புலிகளுடன் மோதல் ஏற்பட்டாலும் அரச பின்னணியில் கிழக்கை கட்டுப்படுத்திக் கொண்டு நிலை கொண்டிருக்கலாமென நினைத்தார். படையணியை பெருக்கினால் புலிகளை நெருக்கடிக்குள்ளாக்கலாம், கிழக்கு விசயத்தில் மூக்கை நுழைக்கமாட்டார்கள் என நினைத்து, உடனடியாக ஆட் சேர்ப்பிற்கு உத்தரவிட்டார். கட்டாய ஆட்சேர்ப்பில் இளவயதானவர்களையும் இணைத்தார்கள். இது சர்வதேச அளவில் விமர்சனத்தை உண்டாக்கியது. சர்வதேச பிரதிநிதிகள் இது பற்றி கருணாவிடம் கேட்கமாட்டார்கள். வன்னியிலுள்ள அரசியல்துறையினரைதான் தொடர்பு கொண்டு விசனத்தை தெரிவித்தார்கள். விடுதலைப்புலிகள் இதை பற்றி கருணாவிடம் பலமுறை சொல்லியும் அவர் ஆட்சேர்ப்பை நிறுத்தவில்லை. இறுதியில் ஒருமுறை, சர்வதேச பிரதிநிதிகளுடனான சந்திப்பிற்கு கருணாவையும் புலிகள் அழைத்தனர். இனி சிறுவர்களை படைக்கு இணைக்கமாட்டோம் என, கருணாவை வைத்துக் கொண்டு விடுதலைப்புலிகள் வாக்களித்த பின்னரே, கருணா கட்டாய ஆட் சேர்ப்பை நிறுத்தினார். கிழக்கு பிரதிநிதித்துவத்தை கருணா அதிகபட்சமாக எதிர்பார்க்கிறார் என்பதை புரிந்துகொண்ட பின்னரே, கருணாவிற்கும் தனி ஹெலிகொப்டர் ஏற்பாடு செய்து அவரையும் பேச்சில் இணைத்துக் கொண்டார்கள்.

இந்த வகையில் பார்த்தால், கிழக்கு பிரதிநிதித்துவத்தை புலிகள் சமமாக பேணினார்கள் என்று தான் கொள்ள வேண்டும். கிழக்கில் கருணா தனித்து செயற்பட முடிவெடுத்த போது, அவரின் கீழ் 5,858 போராளிகள் இருந்ததாக புலிகளின் தலைமை செயலக பதிவுகள் குறிப்பிட்டன. இதில் கட்டாயமாக ஆட்சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,300 அளவில் வரும். விடுதலைப்புலிகள் தன்மீது திடீர் தாக்குதல் நடத்தி, தன்னை கைது செய்யலாமென்ற அச்சம் 2001 ஆம் ஆண்டிலேயே கருணாவிற்கு வந்து விட்டது. இதனால் அவர் பாதுகாப்பு ஏற்பாடொன்று செய்திருந்தார். தனது படையணிகளை பிரித்து பல முகாம்களில் வைத்திருந்தால், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமாகி விடும் என்பதால், தரவையில் பிரமாண்ட முகாம் அமைத்து அங்கேயே அனைத்து போராளிகளையும் நிலைகொள்ள வைத்தார். பிரமாண்டமான இராணுவ வலயமாக அது விளங்கியது. அந்த பிரமாண்ட இராணுவ வலயத்திற்குள் கருணா இருக்கும் வரை புலிகளால் அவரை எதுவும் செய்ய முடியாது. இது கருணாவிற்கும் தெரியும், புலிகளிற்கும் தெரியும். புலிகள் அமைப்பை விட்டு பிரிந்து செல்வதாக கருணா அறிவிக்கவிருந்த சமயத்தில், கருணாவை கைது செய்ய புலிகள் ஒரு இரகசிய ஒப்ரேஷன் ஒன்றை செய்ய திட்டமிட்டனர். அந்த ஒப்ரேஷனின் முக்கிய அங்கமே, கருணாவை தரவை இராணுவ வலயத்திற்கு வெளியில் சந்தேகமில்லாமல் அழைத்து வருவது தான்! கருணாவிற்கும் புலிகளிற்குமிடையில் 2001 இல் இந்த இரகசிய மோதல் தீவிரம் பெற்றாலும், பிரபாகரன் இந்த மோதலை விரும்பவில்லை. வடக்கு, கிழக்கு என்ற பிரிவினையில்லாமல் அனைவரையும் ஒற்றுமையாக வைத்திருக்கவே விரும்பினார். 2002 இன் நடுப்பகுதியில் பொட்டம்மானை அழைத்த பிரபாகரன், கருணா விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்தியிருந்தார். கிழக்கில் விடுதலைப்புலிகளின் புலனாய்வு அணி பலமாக நிலைகொள்வதா? கருணாவின் அணி பலமாக நிலைகொள்வதா? என்பதில் இரண்டு தரப்பிற்குமிடையில் மறைமுக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இதன் விளைவு தான் அற்புதன் மாஸ்ரர் மீதான தாக்குதலும்.

கிழக்கில் புலிகளின் புலனாய்வு அணிகளை தற்காலிகமாக செயலிழக்க செய்யலாம், தென்பகுதி நடவடிக்கை அணிகளை மட்டும் கிழக்கிலிருந்து செயற்பட வைக்கலாமென பிரபாகரன் ஆலோசனையும் சொன்னார். இது பொட்டம்மானிற்கு அவ்வளவாக பிடிக்கவில்லை. இருந்தாலும், பிரபாகரன் சொன்னால் அவர் தட்டமாட்டார். அதனால் தான் பிரபாகரனிற்கு அவரில் அவ்வளவு நம்பிக்கை. அரை மனதுடன் ஏற்றுக் கொண்டார். பிரபாகரன் இத்துடன் நிறுத்தவில்லை. பொட்டம்மானை உடனே கிழக்கிற்கு சென்று, கருணாவுடன் பேசி பிரச்சனைகளை களைய சொன்னார். கிழக்கிலிருந்து புலிகளின் புலனாய்வு அமைப்புக்களை கொஞ்சம் ஒதுங்கியிருக்க செய்து, கருணாவுடன் பிரச்சனைகளை மனம் விட்டு பேசுமாறு அறிவுறுத்தி அனுப்பியிருந்தார். பொட்டம்மானை கிழக்கிற்கு அனுப்புவதற்கு முன்னர், தொலைத்தொடர்பு கருவியில் பிரபாகரனே நேரடியாக கருணாவை தொடர்பு கொண்டு பேசினார். வடக்கு, கிழக்கென இப்படி மல்லுக்கட்டிக் கொண்டிருந்தால் நடக்கும் விபரீதங்களையெல்லாம் புரிய வைத்து, பொட்டம்மானை கிழக்கிற்கு அனுப்பி வைக்கும் விடயத்தையும் சொன்னார். பொட்டம்மானை அனுப்பி வைக்கிறேன், அவருக்கு ஆபத்து நேராமல் பார்த்து கொள்ளலாமா? என பிரபாகரன் கேட்டார். ஏற்கனவே அற்புதன் மாஸ்ரரிற்கு நடத்தப்பட்ட தாக்குதலை குறிப்பிட்டு, இராணுவம் ஏதாவது தாக்குதல் நடத்தாமல் பார்த்து கொள்ளலாமா? என்று தான் பிரபாகரன் கேட்டார். பிரபாகரன் எதையும் அறியாதவர் போல இப்படி கேட்டதன் அர்த்தம், கருணா அணியினரால் ஆபத்தில்லாமல் பொட்டம்மானை திருப்பி அனுப்பி வைக்க முடியுமா என்பது தான். அது கருணாவிற்கும் தெரியும். பொட்டம்மானை பத்திரமாக திருப்பி அனுப்பி வைக்கும் பொறுப்பு தன்னுடையதென கருணா வாக்களித்தார். பொட்டம்மான் என்றால் கருணாவிற்கு எள்ளும் கொள்ளும் வெடிக்கும் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். தனது ஓட்டு மாட்டுக்களை பொட்டம்மான் எப்படியோ கண்டுபிடித்து விடு கிறார் என்பதில் கருணாவிற்கு பயங்கர கடுப்பு. போர்நிறுத்த கண்காணிப்பு குழு ஊடாக முறைப்படி அறிவித்துத்தான் பொட்டம்மான் கிழக்கிற்கு சென்றார். புளியங்குளம் சோதனைச்சாவடியினால் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியினால் வாகனத்தில் அவர் சென்ற விடயம் அப்பொழுது வெளியில் வரவில்லை.


புலிகள், அரசாங்கம் ஆகியவற்றின் உயர்மட்டமும், போர்நிறுத்த கண்காணிப்புகுழுவும் மட்டுமே சம்பந்தப்பட்ட விடயம் இது. அதனால் தகவல் வெளியில் கசியவில்லை. பொட்டம்மான் விட்டுக் கொடுப்புக்களிற்காக மட்டக்களப்பிற்கு சென்றாரே தவிர, அதற்கான சாத்தியங்கள் அங்கு இருக்கவில்லை. பொட்டம்மானை கண்காணிப்பதிலேயே கருணாவின் அணிகள் குறியாக இருந்தன. பொட்டம்மான் மட்டக்களப்பிற்கு வந்ததும், மட்டக்களப்பில் இருந்த புலனாய்வுத்துறை போராளிகளின் பாதுகாப்பில், அவர்களது முகாமில் தங்க முடி வெடுத்தார். ஆனால் கருணா வேறு விதமாகச் சொன்னார். பொட்டம்மானை பத்திரமாக திருப்பி அனுப்ப வேண்டியது தனது பொறுப்பு, அதனால் புலனாய்வுத்துறைக்கு மேலதிகமாக தனது அணிகளும் அவருக்கு பாதுகாப்பு வழங்கும், கஞ்சிகுடிச்சாறில் இருந்த தனது முகாமொன்றிலேயே பொட்டம்மான் தங்கியிருக்கலாமென்றார். பொட்டம்மானிற்கு அதில் பிரச்சனையிருக்கவில்லை. கருணாவை எப்படி கையாள்வதென பொட்டம்மானிற்கா சொல்லிக் கொடுக்க வேண்டும்? பொட்டம்மானுடன் புலனாய்வுத்துறை போராளிகள் தான் தங்கியிருந்தனர். அந்த பகுதியில் கருணாவின் நம்பிக்கைக்குரிய போராளிகள் நிறைந்திருந்தனர்.

கஞ்சிகுடிச்சாறில் இருந்த புலனாய்வுத்துறை முகாமைப்பற்றி தெரிந்தவர்களிற்கு நாம் சொல்லும் லொக்கேஷன் புரியும். பொட்டம்மான் தங்கியிருந்த சமயத்தில், அந்த முகாமிற்கு வெளியில் கருணாவின் கட்டளையின் கீழ், கிழக்கு போராளிகள் வீதிச்சோதனை சாவடியொன்றை அமைத்திருந்தார்கள். காரணம் - பொட்டம்மானின் பாதுகாப்பிற்காம்! இதன் மூலம் அங்கு வருபவர்கள், போகிறவர்கள், பொட்டம்மான் எங்கு போகிறார் என்பதையெல்லாம் கருணா உடனுக்குடன் அறிந்தபடியிருந்தார். மொத்தத்தில் பொட்டம்மான் அங்கு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதை போன்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறேன். தனக்கு தெரியாமல் அவரால் ஒருவரைக் கூட சந்திக்க முடியாது, அப்படி சந்திக்காவிட்டால், கிழக்கில் தனது படையணிக்குள் உள்ள சிக்கல்களை அவரால் அறிந்து கொள்ள முடியாதென கருணா நினைத்தார்!



**நெற்றிப்பொறியன்**

# ஜனாதிபதி தேர்தல் நோக்கிய ரணிலின் நகர்வுகள்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்து நடாத்து என்று கதறிக்கொண்டிருந்த எதிர்க்கட்சிகளெல்லாம். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட நிதி வசதியை அங்கீகரித்ததன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பற்றிப் பேசுவதைக் குறைத்துக்கொண்டன. இலங்கையின் பெற்றோலியச் சந்தைக்குள் போட்டியை ஊக்குவிப்பதற்காக ஏனைய போட்டியாளர்களை உள்ளீர்க்க அமைச்சரவை எடுத்துக்கொண்ட தீர்மானத்தினை எதிர்த்து. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் முன்னெடுத்த வேலைநிறுத்தமும் படுதோல்வியில் முடிந்திருக்கிறது.

எரிபொருள் விலை கணிசமாகக் குறைக்கப்பட்டது. எரிவாயு விலையும் ஆயிரம் ரூபாயால் குறைக்கப்பட்டது. தொடர்ந்தும் விலைவாசி கொஞ்சம் குறையும் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடையே உருவாகியுள்ளது. தான் ஏற்ற பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடத்தக்க அளவு நிறைவேற்றியுள்ளார் என்ற நம்பிக்கை பொதுமக்களிடம் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது. அதனாலோ என்னவோ ஒரு மாதம் முன்பு வரை கூட. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்து நடாத்து என்று தலைகீழாக நின்ற எதிர்க்கட்சிகள் தற்போது கள்ள மௌனம் சாதிக்கின்றன.

அரசியல் யதார்த்தம் அவர்களுக்கும் விளங்கியிருக்கும். அதுபோல. ரணில் விக்கிரமசிங்க என்ற அரசியல் சாணக்கியன் உள்ளூாராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துவதில் அக்கறையற்றிருந்ததற்கும். ஐ.எம்.எஃப் உதவி கிடைத்தபின் களநிலவரங்கள் மாறும் என்ற கணிப்பும் முக்கியமானதாக இருந்திருக்கும். தற்போது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கமாகக் காற்றடிக்கத் தொடங்கியுள்ளது. இதனால். சஜித் பிரேமதாஸ பக்கத்திலுள்ள பலரும் ரணில் விக்ரமசிங்க பக்கம் தாவுவதற்கு சமயம் பார்த்துக்கொண்டிருப்பதான கருத்துக்கள் பரவலாகப் பதியப்படுகின்றன.

இலங்கை அரசியலில் கட்சி தாவுதல் என்பது. குரங்கு கொப்பு விட்டு கொப்பு தாவுவதைப் போன்றது. ஆகவே சமகி ஜன பல வேகயவினர். சஜித் என்ற காய்ந்து போன கொப்பிலிருந்து. ரணில் என்ற ஆலமரத்திற்கு தாவ விரும்புகிறார்கள் என்ற செய்தியில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆனால் அந்தத் தாவலும். ஆதரவும் இந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தேவையா? என்பதுதான் முக்கிய கேள்வி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்த வரையில். பொருளாதார மீட்சித் திட்டங்கள் தான் முன்னுரிமையுடைய தேவையாக இருக்கின்றன என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். அதன்படி. அந்தத் திட்டங்களுக்கு உயிர் கொடுப்பதற்கு தேவையான பாராளுமன்றப் பெரும்பான்மை. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுணவின் ஆதரவில் ஜனாதிபதி ரணிலுக்கு உண்டு. ஆகவே அதற்காக சமகி ஜன பலவேகய ஆட்களை பதவி கொடுத்து கட்சிதாவச் செய்ய வேண்டிய அத்தியாவசிய நிலையில் அவர் இல்லை.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுக்க வேண்டும் என்ற அவருடைய தனிப்பட்ட விருப்பத்திற்கு. ஐ.தே.க-விட்சியிலிருந்து விலகியவர்களை மீண்டும் கொண்டு வருவது பற்றி அவர் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர் ஐ.தே.கட்சியிலிருந்து தன்னை தற்போது சற்றே தூ ரமாக வைத்திருந்தாலும். அவர்தான் இன்னமும் ஐ.தே.கட்சியின் தலைவர். இந்த இடத்தில் தான் அடுத்த தேர்தல் பற்றிய கேள்வி எழுகிறது. ஜனாதிபதியால் தற்போது பாராளுமன்றத்தைக் கலைத்து பாராளுமன்றத் தேர்தலை நடத்த முடியும். அல்லது ஜனாதிபதித் தேர்தலுக்குப் போக முடியும். இதில் எதை ஜனாதிபதி ரணில் செய்யப்போகிறார் என்பது தான் இப்போதுள்ள கேள்வி. ஜனாதிபதி ரணில் ஆதரவளிக்கும் கட்சி அல்லது தரப்பின் வேட்பாளர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுவதைவிட. ஜனாதிபதித் தேர்தலொன்று தற்போது நடந்தால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

தற்போதைய சூழலின் கீழ். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண ஜனாதிபதி ரணிலை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கும் என்று தெரிகிறது. அப்படியானால் அவர்கள் ஒரு போட்டியாளரை நிறுத்தப் போவதில்லை. சஜித் பிரேமதாஸ. ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து இன்றைய சூழலில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா? என்பது கேள்விக்குறியே. ஓரளவேனும் தந்திரோபாயமாகச் சிந்தித்தால் அவர் அதனை தவிர்ப்பார். ஆனால் உணர்வுவசப்பட்டுச் சிந்தித்தால். அவர் போட்டியிடக் கூடும். மறுபுறத்தில். ஜே.வி.பி தனது தற்போதைய முகமூடியான என்.பி.பி-யின் கீழ் அநுரகுமார திசாநாயக்க போட்டியிடக் கூடும். அதுபோல "ஹெலிகொப்டரில்" மைத்திரி பாலவோ. டளஸோ எங்கு இருக்கிறார்களோ. அங்கு சிறுபான்மையினரின் வாக்குகள் இருப்பதில்லை என்பது தான் இலங்கை தேர்தல் நியதி! ஆகவே இந்த விடயத்தில் சிறுபான்மையினருக்கு நம்பிக்கையளிக்க வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி ரணில் இருக்கிறார். அது அவ்வளவு இலகுவானாதாக இருக்கப் போவதில்லை. 2023 பெப்ரவரி 4. சுதந்திர தினத்திற்கு முன் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கு என்று சொன்னவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் பெப்ரவரி போய். மார்ச் போய். ஏப்ரலும் போய். மே வந்து விட்டது. ஆனால் தீர்வு பற்றியோ. ஏன். குறைந்தபட்சம் 13ம் திருத்தத்தின் முழுமையான அமுல்ப்படுத்தல் பற்றியோ எந்தக் கதையுமே இல்லை. மறுபுறத்தில். தொல்பொருள்திணைக்களமென்ற பெயரில் பேரினவாத சக்திகளின் அட்டகாசம் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் அடையாளங்களைச் சிதைத்துக்கொண்டிருப்பதை தமிழ் மக்கள் சினத்தோடும். கடும் விசனத்தோடும் எதிர்கொள்கிறார்கள். இதுவெல்லாம் சிறுபான்மையினர் வாக்குகளை அந்நியமாக்கும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் புரிந்துகொள்வது நல்லது.

போட்டியிடக்கூடும். இந்தக் களத்தில் எதிர்த்தரப்பு பிளவடைந்திருக்கிறது. அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்குவது என்பது மிகக்கடினமான காரியம். ரணில் விக்கிரமசிங்க என்ற அரசியல் சாணக்கியன் இருந்ததால் தான் 2015-ல் எதிர்க்கட்சியின் பிரதான வேட்பாளர் என்ற திரண்ட ஆதரவுத்தளத்தில் போட்டியிட்டு மைத்திரி பாலவினால். மஹிந்தவை எதிர்த்து வென்று ஜனாதிபதியாக முடிந்தது.

ஒருவேளை அந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பிரிந்து நின்றிருந்தால். அந்த வெற்றி சாத்தியமாகியிருக்காது. இதில் ஜே.வி.பி-கூட தன்னுடைய வேட்பாளரை இறக்காது. கூட்டணிக்கு வெளியில் நின்று மைத்திரி பாலவை ஆதரித்திருந்தது. இன்றைய சூழலில் இதுபோன்றதொரு பொதுவேட்பாளர் இறக்கப்பட்டு. அவரை அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரிக்குமா என்பது கேள்விக்குறியே! சஜித் போட்டியிட்டால். அவரை கூட ஆதரிக்குமா? என்பதும் கேள்விக்குறியே. அல்லது வேறு ஒருவர் பொது வேட்பாளராகும் போது. அவரை வெல்ல வைக்க சஜித் ஆதரிப்பாரா? என்பதும் கேள்விக்குறியே! ஆகவே இந்தக் கணக்குகளைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்த வரையில் அடுத்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதை விட. ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வது தான் ஒப்பீட்டளவில் சாதகமானதாக இருக்கும்.

இதைச் செல்வதால். ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி உறுதி என்று சொல்வதாக அர்த்தமில்லை. ஒருவேளை எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு ஒரு பொது வேட்பாளரை ஆதரித்தால் அது சாத்தியம். இன்றைய எதிர்க்கட்சிகளின் இயக்குகரமாக இருக்கும் வெளிநாட்டு தூதுவராலய சக்திகளின் அழுத்தத்தின் பெயரில் அப்படியொரு தேர்தல் கூட்டு சாத்தியமானாலும் அதிசயமில்லை. அப்படியொரு நிலையின் கீழ் ஒரு "தரமான" பொதுவேட்பாளர் இறக்கப்பட்டால். ரணில் விக்கிரமசிங்க கணிசமான சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இந்த இடத்தில்தான் மறுபடியும். இலங்கையின் சிறுபான்மையினரின் வாக்குகள் முக்கியத்துவம் மிக்கனவாக மாறுகின்றன. சிறுபான்மையினர் ரணிலை ஆதரிப்பார்கள் என்ற எடுகோள். இம்முறை கொஞ்சம் சவாலுக்குட்படும்! ஏனென்றால் இம்முறை ரணிலை. ராஜபக்ஷக்கள் எதிர்க்கவில்லை. ஆதரிக்கிறார்கள். ராஜபக்ஷக்கள் சிறுபான்மையினர் வாக்குகளை அந்நியமாக்கும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் புரிந்துகொள்வது நல்லது. இல்லையென்றால். 2005 மீண்டும் நடக்கலாம். ஆகவே ஜனாதிபதி ரணில் இதுபற்றியும் கரிசனம் கொள்வது அவசியம். தமிழ் அரசியல் கட்சிகள். இந்த முறை பலமான பேரமொன்றில் ஜனாதிபதி ரணிலுடன் ஈடுபட வேண்டியது அவசியம். நூறு கோடி ரூபாய்க்கான பேரமல்ல. மாறாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பான பேரத்தில் ஈடுபட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே சில உறுதிமொழிகளை மட்டுமல்ல. சில நிபந்தனைகளையும் நிறைவேற்றிக்கொண்ட பின் ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

2024ன் இறுதிப்பகுதியில் நடக்க வேண்டிய ஜனாதிபதித் தேர்தல். 2024ன் ஆரம்பப் பகுதியில். அல்லது நடுப்பகுதியில் நடக்கலாம் என்பது தான் இப்போதைய எதிர்பார்ப்பு. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு அடுத்த சில மாதங்களில் பாராளுமன்றத் தேர்தலும் நடத்தப்படலாம். எது எவ்வாறாயினும். 2024-2025 தேர்தல் ஆண்டுகளாகவே இருக்கப் போகின்றன. அதற்கான முஸ்தீபுகள் ஆரம்பமாகிவிட்டன.



# பிராந்திய செய்திகள்

## கிளிநொச்சி - ஆனையிறவில் போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது

கிளிநொச்சி - ஆனையிறவில் போலி நாணயத்தாள்களுடன் பல்கலைக்கழக மாணவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்திற்கிடமாக பயணித்த மோட்டார் சைக்கிளொன்றை சோதனைக்கு உட்படுத்திய போதே




போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் 250 கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் 500 ரூபா போலி நாணயத்தாள்கள் 27 கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 24 வயதான பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் 26 வயதான மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளுக்காக யாழ். மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பஸ்கள் மோதி விபத்து

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் பட்டலீய கஜூகம பகுதியில் அன்று(06) காலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட 27 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கண்டியில் இருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் கொழும்பில் இருந்து மூதூர் நோக்கி பயணித்த பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் வத்துப்பிட்டிவல ஆதார வைத்தியசாலையிலும் வரக்காபொல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



## எரிபொருள் ஏற்றி சென்ற பௌசர் விபத்து

ஹப்புத்தளை பத்கொட பகுதியில், அன்று(06) அதிகாலை எரிபொருள் ஏற்றி சென்ற பௌசர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அன்று(06) அதிகாலை 4 மணியளவில், இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் இருந்து, 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் ஹப்புத்தளை நோக்கிப் பயணித்த குறித்த எரிபொருள் பௌசர், வீதியை விட்டுவிலகிச் சென்று அருகில் உள்ள வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, காயமடைந்த குறித்த வாகனத்தின் உதவியாளர் பங்கட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்தினால், குறித்த வீட்டுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், வீட்டிலுள்ளவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவ் விபத்தால் டீசல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டதை அடுத்து, அதிலிருந்து டீசல் வெளியேறுவதாகவும், குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் அதனை நிரப்பிச் செல்வதை அவதானிக்க முடிவதாகவும் கூறப்படுகிறது.




## வெசாக் கூடுகளினால் அலங்கரிக்கப்பட்ட அம்பாறை மாவட்டம்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு வெள்ளிக்கிழமை(5) இரவு பொது மக்களுக்கு தேனீர் மற்றும் பிஸ்கட் கடலை சோறு தானம் வழங்கும் நிகழ்வு பரவலாக இடம்பெற்றன. அம்பாறை மாவட்டம் கல்முனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, காரைதீவு ,சம்மாந்துறை ,அம்பாறை ,நகரப்பகுதிகளில் பெருமளவான வெசாக் கூடுகள் பல வர்ணங்களில் நிர்மாணிக்கப்பட்டு பக்தி பாடல்கள் ஒலிபரப்பட்டு குறித்த தானம் வழங்கும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

மேலும் வங்கிகள் பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள் ,கடற்படையினர் ,தனியார் நிறுவனங்கள், அரச நிறுவனங்களின் ஏற்பாட்டில் தானம் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது தவிர இராணுவத்தினரால் மல்வத்தை ,கல்முனை பகுதிகளில் பிரமாண்டமான வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டு பக்தி பாடல்கள் ஒலிபரப்பட்டிருந்தன. இந்த வெசாக் கூடுகளை பார்வையிடுவதற்காக தமிழ், முஸ்லீம் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளதுடன் தானம் வழங்கும் நிகழ்விலும் பங்கேற்றிருந்தனர்.

மேலும் பிரதான வீதியினால் சென்ற பொது மக்களுக்கு பிஸ்கட் மற்றும் தேனீர் குளிர்பானம் என்பனவற்றையும் இராணுவத்தினர் தானமாக வழங்கியதை அவதானிக்க முடிந்தது. இதே வேளை பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை வெசாக் தின நிகழ்வினை முன்னிட்டு வெசாக் வெளிச்ச வீடுகளை தொங்க விட்டிருந்தனர். இதே வேளை அம்பாறை மாவட்டத்தில் உள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் ,வைத்தியசாலைகளிலும் வெசாக் வெளிச்ச கூடுகள் பரவலாக காட்சி படுத்தப்பட்டிருந்தன.




## யாழில் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து நகை, பணம் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர், முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி சாரதிகளின் நகை மற்றும் பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளனர். ஒரே நாளில் இரு முச்சக்கர வண்டி சாரதிகளிடம் இருந்து நகைகள் மற்றும் பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து அன்று(05) முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி கீரிமலையில் உள்ள காணிகளை பார்க்கவென பெண்ணொருவரும் இரண்டு ஆண்களும் கீரிமலை பகுதிக்கு சென்றுள்ளனர். கீரிமலையில் முச்சக்கர வண்டி சாரதிக்கு குளிர்பானத்திற்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அந்த கும்பல், கீரிமலையில் இருந்து பருத்தித்துறை செல்ல பிறிதொரு முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தி பருத்தித்துறைக்கு செல்லும் வழியில் சாரதிக்கும் குளிர்பானத்திற்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை கீரிமலையில்மயக்கமடைந்த முச்சக்கரவண்டிசாரதிதெல்லிப்பழைவைத்தியசாலையிலும், மற்றையவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாண சிறைச்சாலையில் 14 கைதிகள் விடுதலை!

வெசாக் தினத்தினை முன்னிட்டு , அன்றைய தினம் (05) யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து 14 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வெசாக் தினத்தினை முன்னிட்டு , ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் அடிப்படையிலையே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். சிறு குற்றங்கள் , தண்ட பணம் செலுத்த முடியாததால் சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் உள்ளிட்டவர்களே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.




## தமிழ், முஸ்லிம் இன நல்லுறவை கட்டியெழுப்பும் கலை கலாசார நிகழ்வு

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் நிதிப்பங்களிப்புடன் முஸ்லிம் எய்ட் நடைமுறைப்படுத்தும் **SEDR Active Citizens** எனும் செயற்திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் செயற்படுத்தப்படும் வழறயசனள ய உாயபெந (ஒரு மாற்றத்தை நோக்கி) குழுவின் ஏற்பாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் சம்மாந்துறை கோரக்கர் வித்தியாலய மைதானத்தில் கலை கலாசார நிகழ்வுகளும், சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவும் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.முஹம்மத் ஹனீபா, சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் இளங்கோவன், பள்ளிவாசல் நிர்வாக சபையினர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் போன்றவர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக வழறயசனள ய உாயபெந (ஒரு மாற்றத்தை நோக்கி) குழுவினர் ஒழுங்கு செய்திருந்த காட்சிப் பலகையில் இந்நிகழ்விற்கு வருகை தந்த பிரதம விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் தமது கையொப்பங்களை பதிவு செய்தனர்.




# சினி துளிகள்




## 40 தொட்ட இளவரசி நடிகை த்ரிஷா



த்ரிஷா என்று கூறுவதை விட குந்தவை என கூறுவது இப்போது ரசிகர்களுக்கு மிகவும் பிடித்த பெயராக உள்ளது. பொன்னியின் செல்வன் படத்தில் இளவரசி குந்தவையாக நடித்து மக்களை வெகுவாக கவர்ந்து விட்டார்.

மே 4, நடிகை த்ரிஷாவின் பிறந்தநாள். 40வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். அமீர் இயக்கத்தில் சூர்யா நடித்த மௌனம் பேசியதே படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமானவர் த்ரிஷா.

அதன்பிறகு அவரது பயணம் எல்லாமே தமிழ் சினிமா ரசிகர்களுக்கு அத்துப்படி. சரி 40வது பிறந்தநாளை கொண்டாடும் நடிகை த்ரிஷாவின் சொத்து மதிப்பு, புதுப்படங்களுக்கு வாங்கும் சம்பளம் போன்ற விவரங்களை காண்போம்.

பொன்னியின் செல்வன் படத்தில் அழகான இளவரசி குந்தவையாக நடிக்க அவர் ரூ. 3 கோடி வரை சம்பளம் பெற்றாராம். அதேபோல் விஜய்யுடன் ஜோடியாக லியோ படத்தில் நடிக்க ரூ. 4 கோடி வரை சம்பளம் பெற்றுள்ளதாக தகவல்.

மாதம் ரூ. 60 லட்சம், ஆண்டுக்கு ரூ. 9 கோடி வரை த்ரிஷா விளம்பரங்கள், படங்கள் மூலம் சம்பாதித்து வருவதாக தெரிவிக்கின்றன. சென்னையில் ரூ. 6 கோடி மதிப்பிலான சொந்த வீடு, ஹைதராபாத்தில் ஒரு வீடு, ரியல் எஸ்டேட் மூலமும் சம்பாதிக்கிறாராம்.

ரூ. 60 லட்சம் மதிப்புள்ள ரேஞ்ச் ரோவர் எவோக், ரூ. 63 லட்சம் மதிப்புள்ள மெர்சிடஸ் பென்ஸ் இ கிளாஸ் மற்றும் ரூ. 40 லட்சம் மதிப்பிலான பிஎம்டபிள்யூ கார்கள் திரிஷாவிடம் உள்ளன.

மொத்தமாக நடிகை த்ரிஷாவின் சொத்து மதிப்பு ரூ. 70 முதல் ரூ. 80 கோடி வரை இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கவினிக்கு ஜோடியாகும் நடிகை ப்ரீத்தி



கவின் தற்போது தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்ற திரைப்படம் டாடா. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து கவின் அடுத்ததாக பியார் பிரேம காதல் படத்தின் இயக்குனர் இளன் இயக்கத்தில் நடிக்கபோவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதே போல் சதிஷ் இயக்கத்திலும் ஒரு படத்தில் கமிட்டாகியுள்ளாராம் கவின்.

இந்நிலையில், இப்படத்தில் கவினுக்கு ஜோடியாக நடிக்க தற்போதைய சென்சேஷன் நடிகை ப்ரீத்தியிடம் பேச்சு வார்த்தை நடந்து வருகிறாராம். நடிகை ப்ரீத்தி சசிகுமார் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றிபெற்ற அயோத்தி படத்தில் ஹீரோயினாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கவின் - ப்ரீத்தி இணையும் படத்தின் அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜிவி பிரகாஷுடன் இணைந்த ஐஸ்வர்யா ராஜேஷ்




இசையமைப்பாளர், நடிகர் என பன்முகத்தன்மை கொண்ட ஜிவி பிரகாஷ் குமாருடன் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் முதல் முறையாக இணைந்துள்ளார். இப்படத்தை "செத்தும் ஆயிரம் பொன்" படத்தின் இயக்குனர் ஆனந்த் ரவிச்சந்திரன் இயக்குகிறார்.

மேலும் காளி வெங்கட், இளவரசு,ரோஹிணி, தலைவாசல் விஜய், கீதா கைலாசம் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ஜெகதீஷ் சுந்தரமூர்த்தி ஒளிப்பதிவு செய்யும் இந்த திரைப்படத்திற்கு, ஜி. வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.

இந்நிலையில் ஃபேமிலி எண்டெர்டெயின்மெண்ட் படமாக உருவாகி வரும் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மோஷன் போஸ்டரை திரைப்பிரபலங்கள் பலரும் வெளியிட்டுள்ளனர். டியர் என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மோஷன் போஸ்டரை இணையத்தில் வைரலாகி வருகிறது.



## கண்ணீர் மல்க விடைகொடுத்த உறவுகள்.. மனோபாலாவின் உடல் தகனம்



தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனரும், தயாரிப்பாளரும், நடிகருமான மனோபாலா உடல்நலக்குறைவால் அன்று(05.04) காலமானார். 69 வயதாகும் இவர் கல்லீரல் பிரச்சனை காரணமாக கடந்த சில நாட்களாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த சிகிச்சைக்கு மத்தியில் வீட்டில் ஓய்வெடுத்து வந்த நிலையில் அவர் உயிரிழந்தார். இவரது திடீர் மறைவு திரையுலகினரை மட்டுமல்லாது பலரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

இவரது மறைவுக்கு திரைபிரலங்கள், அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் என பலரும் நேரிலும் சமூக வலைத்தளத்தின் வாயிலாகவும் அஞ்சலி செலுத்தினர். மனோபாலாவின் இறுதி ஊர்வலம் சென்னை சாலிகிராமத்தில் உள்ள அவரது வீட்டிலிருந்து புறப்பட்டு வளசரவாக்கம் மின்மயானத்தை சென்றடைந்தது. அங்கு அவரின் உடலுக்கு குடும்ப வழக்கப்படி இறுதி சடங்குகள் செய்யப்பட்டன. இறுதி சடங்குகளை அவரது மகன் செய்தார். அங்கு கூடியிருந்த குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் என அனைவரும் இறுதி மரியாதை செலுத்தினர். அதன் பின்னர் மனோபாலாவின் உடல் தகனம் செய்யப்பட்டது. மனோபாலாவின் உடலுக்கு உறவினர்கள்

## பிச்சைக்காரன்-2 படம் வெளியிட அனுமதி

இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி தற்போது இயக்கி நடித்துள்ள திரைப்படம் "பிச்சைக்காரன் -2". இப்படம் ஏப்ரல் 14-ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில் இப்படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று மாங்காடு மூவிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ராஜகணபதி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த புகார் மனுவில், "மாங்காடு மூவிஸ் நிறுவனம் தயாரிப்பில் 2016-ஆம் ஆண்டு வெளியான "ஆய்வுக் கூடம்" திரைப்படத்தின் கருவையும், வசனத்தையும் விஜய் ஆண்டனி "பிச்சைக்காரன் -2" திரைப்படத்திற்கு பயன்படுத்தியுள்ளதால் இந்த படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் தனக்கு நஷ்டஈடாக ரூ.10 லட்சம் வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அதன்பின்னர் விஜய் ஆண்டனி தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், ஆய்வுக்கூடம் படம் குறித்த எந்தவொரு தகவலும் தமக்கு தெரியாது என்றும் அந்த படத்தை பார்த்தது கூட இல்லை என்றும் கூறப்பட்டது. மேலும், வழக்கு தொடரப்பட்ட பிறகே அந்த படத்தை பார்த்ததாகவும் பிச்சைக்காரன் -2 படத்திற்கும் ஆய்வுக்கூடம் படத்திற்கும் எந்த ஒற்றுமையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. படம் வெளியாவதை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கடைசி நேரத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் படத்தின் வெளியீடு தள்ளிப்போனதால் பொருளாதார ரீதியாக தனக்கு பெருத்த இழப்பு மற்றும் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் விஜய் ஆண்டனி அந்த பதில் மனுவில் வேதனை தெரிவித்திருந்தார். இந்நிலையில் பிச்சைக்காரன் -2 படத்தை வெளியிட அனுமதியளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் படத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் விவரங்களை தாக்கல் செய்ய தயாரிப்பாளர் விஜய் ஆண்டனிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பிச்சைக்காரன் -2 திரைப்படம் வருகிற மே 19ம் திகதி வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

19



யாழ்ப்பாணத்தில் நிலைமை இவ்வாறு இருக்க கிழக்கிலும் இவ்வாறான நிலைமையே ஏற்பாடு இருந்தது. அங்கும் போராளிகள் இராணுவத்திடம் பிடிபடும் போது அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தி உயிரை அர்ப்பணிக்கும் வகையில் குண்டு பொருத்திய ஜாக்கேற்றுடன் செயற்பட தொடங்கியிருந்தார்கள். இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் நிலைமை இவ்வாறு இருக்க வன்னியில் புதிய போராளிகளின் அணிகள் பெருகிக்கொண்டு இருந்தன. போராளிகளாக பலர் தாமாகவும் பெற்றோர்களாலும் ஒப்படைக்கப்பட்டுக்கொண்டு இருந்தனர். அதிகமானவர்கள் வந்து இணைந்ததால் ஒரு கட்டத்தில் அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு போதியளவு பயிற்ச்சி ஆசிரியர்கள் இல்லாமை ஒரு பெரும் பிரச்சனையாக மாறியிருந்தது.

அன்றைய பயிற்சி முகாம்களை எடுத்துக்கொண்டால் (200) பேர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டு இருந்தன. காட்டுக்குள் அமைக்கப்பட்ட முகாமிற்கு கிணறு வசதி கழிப்பிட வசதி பயிற்சி இடைவேளையின் போது பொழுது போக்கு வசதிகளென அனைத்தும் நிறைந்து காணப்படுகிறது. அத்துடன் அவர்களுக்கு பயிற்சிக்கு தேவையான சத்தான உணவுகளும் வழங்கப்பட்டன. அனைத்து கல்வியறிவு பொது அறிவு வகுப்புக்கள் எல்லாம் இந்த முகாம்களில் அடிக்கடி நடைபெறும். ஒவ்வொரு போராளிக்கும் சூட்டு பயிர்ச்சிக்கென (30) ரவைகள் வழங்கபட்டன. ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்றவகையில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த அடிப்படை பயிற்சி தளங்கள் கேணல் கடாபி அவர்களின் பொறுப்பில் நேரடியாக நடைபெற்றன. இவ்வாறான பயிற்சி தளங்களை சிறிலங்காவின் வேவு விமானங்கள் கண்டறிந்து தகவல்களை கொடுத்தும் இருந்தன.

இந்த புகைப்படங்களை கொண்டு விடுதலைப்புலிகள் சிறுவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள் என சிறிலங்கா பிரச்சாரங்களை மேற்கொண்டதுடன் அவற்றின் மீது சிறிலங்கா வான் படையினர் வான் தாக்குதலையும் மேற்கொண்டனர். இந்த தாக்குதல்களால் அச்சமடைந்த புதிய போராளிகள் பயிற்சியில் இருந்து விலகி சென்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

பயிற்சி தளங்களின் மீது தாக்குதல் நடத்திய அதே வேளை விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளை கொல்லுவதற்காக ஆழ ஊடுருவும் படையணியை களத்தில் இறக்கியது சிறிலங்கா. நீண்ட தூரம் ஊடுருவி காத்திருந்து விடுதலைப்புலிகளின் தளபதிகள் பொறுப்பாளர்களை இலக்குவைத்து தாக்கும் நடவடிக்கைக்காக பெருமளவான ஆழ ஊடுருவும் படையினர் களத்தில் இறக்கப்பட்டு இருந்தனர். சிறிலங்காவின் இந்த நடவடிக்கையானது அடுத்தகட்ட தாக்குதலை முன்னெடுப்பதற்கு ஒரு தடைக்கல்லாக்கியது. விடுதலைப்புலிகள் தமது படையணியை இன்னொரு பக்கத்திற்கு திசை திருப்பவேண்டிய நிலையை இது ஏற்படுத்தியது. தளபதிகளின் பாதுகாப்பிற்காக பெருமளவு போராளிகள் ஒதுக்கப்பட்டனர். விடுதலைப்புலிகளின் பின் தளங்களுக்குள் இந்த ஆழ ஊடுருவும் படையணியினை ஊடுருவவிடாமல் தடுப்பதற்கு பெருமளவான போராளிகளை நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. போராளிகள் நிறுத்தப்பட்டு பின்தளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அதே வேளைகளில் முதன்மை வீதிகளில் (100) மீற்றருக்கு ஒரு காவலரண் அமைக்கப்பட்டு பொதுமக்களை கொண்ட உள்ளக பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் மூலம் வீதி பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதாவது வன்னியில் உள்ள திருமணம் செய்தவர்கள் தொழில் புரிபவர்கள் மக்கள் படைக்கட்டுமானம் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு ஏழு நாட்கள் என்றவகையில் கட்டாய பாதுகாப்பு பணியில் ஈடுபடுமாறு பணிக்கப்படுகின்றார்கள். இந்த கட்டமைப்பில் ஈடுபட மறுப்பவர்களுக்கு தண்ட பணம் அறவிடப்பட்டது.



வன்னியை பொறுத்தமட்டில் பெரும்பாலான இடங்கள் காடுகளால் நிறைந்துள்ளது. காடுகளுக்கு ஊடாகத்தான் பல வீதிகள் செல்கின்றன. இவ்வாறு இந்த வீதியின் பாதுகாப்புக்காகவே இவர்கள் கட்டாயத்தின் பெயரில் அழைக்கப்படுகிறார்கள். ஆனால் புறநகர் வீதிகள் காவல்துறை உறுப்பினர்களை கொண்டு பாதுகாக்கப்படுகின்றது. ஒரு கிலோமீற்றருக்கு ஒரு காவலரண் அமைக்கப்பட்டு காலை மாலை ரோந்து செய்யப்பட்டு புறநகர் வீதிகள் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு உள்ளக பாதுகாப்பிற்கென ஏராளமான ஆயுதங்கள் அணிகள் ஒதுக்கப்படுகின்றன. இதனால் நிர்வாக தேவை அதிகரிக்கிறது. ஆயுத பற்றாக்குறை நிலவுகின்றது. பழுதடைந்த ஆயுதங்கள் திருத்தி பாவிக்கும் அளவிற்கு நிலைமை ஏற்படுகிறது. உதாரணமாக கூறுவதானால் வீதி பாதுகாப்பில் உள்ள உள்ளக பாதுகாப்பு படையினருக்கு ஆயுதம் போதாமை காணப்படுகிறது.

(500) மீற்றர் தூரத்திற்கு ஒரு காவலரண் அமைக்கப்படுகின்றது. அதில் மூன்று நான்கு பேர்கள் காவலில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இவர்களில் இருவருக்கு தான் ஆயுதம் வழங்கப்பட்டிருக்கும். வன்னியில் உள்ள வீதிகளின் நீளத்தை கணக்கெடுத்து பார்த்தால் தெரியும் எத்தனை காவலரண்கள் அமைக்கப்பட்டு இருக்கும் அதற்கு எத்தனை பேர்கள் தேவைப்படுவார்கள் என்பது. விடுதலைப்புலிகளின் தளபதிகள் நடமாடும் அனைத்து வீதிகளும் இவ்வாறுதான் பாதுகாக்கப்படும். இதேவேளை பாதுகாப்பு கடமைக்கு ஆட்கள் போதாமை இருக்கையில் பண வசதி படைத்தவர்கள் காவல் கடமைக்கு செல்லாமல் தண்ட பணத்தினை செலுத்தினார்கள். இதனால் உள்ளக பாதுகாப்பிற்கு ஆளணி பற்றாக்குறை மேலும் அதிகரித்தது. இதனால் சில வீதிகள் பாதுகாப்பில் இருந்து நீக்கப்படுகின்றன அத்துடன் ஒரு கட்டத்தில் சுற்றி சுற்றி உள்ள பாதுகாப்பு பணிக்காக ஒரு சில பொதுமக்களே போகவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. இதனால் அவர்களிடையே ஒரு கசப்புணர்வு தோன்றியது.

இது பாதுகாப்பில் பலவீனத்தை ஏற்படுத்தியது. இவை அன்று நடந்த உண்மைகள் மக்களின் இவ்வாறான செயற்பாட்டிற்கு அன்று சில பொறுப்புகளில் இருந்த பொறுப்பாளர்களும் காரணம் என்பதில் மறுப்பதற்கு இல்லை. வன்னியில் நிலைமை இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளின் தென்னிலங்கை மீது தாக்குதல்கள் தொடர்கின்றன. காலிதுறைமுகம் மீதான தாக்குதல் இதில் முக்கியமானவை. (2006) ஒக்டோபர் (18) ம் திகதி அதிகாலை நடந்த தாக்குதலில் ஐந்து படகுகளில் வந்த பதினைந்து வரையான கரும்புலிகள் தாக்குதலில் ஈடுபட்டிருந்ததாக சிறிலங்கா அரசு தெருவித்திருந்த போதிலும் அவர்கள் தாக்குதலை நடத்திவிட்டு எவ்வாறு போனார்கள் என்பது தெரிவிக்கவில்லை. இதில் கடற்படையினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன. பலம் பொருந்தியதாக கருதப்பட்ட காலி துறைமுகத்தில் நுழைந்து தாக்கிவிட்டு தப்பியும் சென்றது சிறிலங்காவிற்கு பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தி இருந்தது. இந்த தாக்குதலால் அதிர்சியடைந்த சிறிலங்கா காலியில் உள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்களை தாக்கியளித்து தனது ஆத்திரத்தை தீர்த்து கொண்டது.

அத்துடன் கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுகட்ட கடற்புலிகளின் மீது தாக்குதல் நடத்தவும் சிறிலங்கா திட்டமிட்டது. அப்போது விடுதலைப்புலிகளின் கடற்புலி தளங்கள் வடமராட்சி கிழக்கு பகுதியிலையே அதிகளவில் செயற்பட்டு கொண்டிருந்தன.

தொடரும்...

# மூலிகைகளும் குழந்தைகளின் சுக வாழ்வும்



படம் வரைந்தவர்: துளசி குரு

டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

அரச பதிவு இலக்கம் - 10,294
மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி, தெல்லிப்பளை.



குழந்தைகளுக்கு நோய் ஏற்படும் போது பெற்றோர் மிகவும் வேதனைப்படுவதைக் காணலாம். குழந்தைகளின் போசணையிலும் உடல். உள வளர்ச்சியிலும். நோய் வராமல் தடுப்பதிலும் நோய் வந்த பின்னர் குணப்படுத்துவதிலும் நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த முலைப்பாலின் முக்கியத்துவத்தால் முலைப்பால் சேர்ந்த பல மருந்துகள் சித்த மருத்துவ குழந்தை மருத்துவத்தில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. முலைப்பால் எண்ணெய். முலைப்பாலேரண்டெண்ணெய். முலைபாற் குளிகை போன்ற மருந்துகள் தமிழ் மருத்துவர்களால் கொடுக்கப்பட்டு வருகின்றது. முலைப்பால் பல்வேறு மருந்துகளுக்கு அனுபானமாகவும் வழங்கப்படுவதைக் காணலாம்.

சுவாத நோய் நிலையில் சன்னி நிலைக்கு சென்று மரணமடையும் நிலையில் கூட பெரிய கோரோசனை மாத்திரையை இஞ்சி. தேன். முலைப்பால் ஆகியவற்றில் உறைத்து மூன்று மணிக்கொரு தடவை வழங்கும் போது குழந்தை உயிர் தப்புவதைக் காணலாம்.

சிறு பிள்ளைகளுக்கு ஏற்படும் கடும் சளி. சுரம். சுவாதம். இழுப்பு. முட்டு நிலைகளில் தக்காளிச் சாற்றுக் கோரோசனை மாத்திரை சிறப்பாக செயற்படுவதை அனுபவத்தின் மூலம் காணலாம். சித்த மருத்துவர்கள் சாதனா போதனா முறையில் நெறி முறையில் முறைப்படி கற்றவற்றை செயன்முறையில் செய்து அனுபவம் பெறுவது அவசியம்.

**"செங்கிரந்தியுடல் சிவக்கு மிடறு கட்டுஞ் செயலற்று**
**சோருமன்றி யுகாழ்தும்**
**துங்கமுற மலங்கட்டும் பாலுண்ணாது. தோன்று**
**மைந்து தினங்கழியினன்மை சாரும்**
**பங்கமுறு கருங்கிரந்தி கறுத்துக் காட்டும் பகலும்**
**வாய் வரண்டு மிகக் குரலுங் கட்டும்**
**பொங்கி மிக வயிறூதி மலமுங் கட்டும் பொல்லாத**
**நோயிதெனப் புகன்றா ரன்றே"**
**(பரராசசேகரம் பாலரோகம் பாடல் 01)**

செங்கிரந்தி ஏற்படும் போது உடல் சிவந்து காணப் படும். தொண்டை அடைத்துக்கொள்ளும். உடல் அசதியுடன் சோர்வடைந்து காணப்படும். வயிறு பொருமிக் கொள்ளும். மலம் போகாது. பால் குடிப்பதற்கு கஷ்டப்படும் இந்த நோயானது சீரான சிகிச்சையால் ஐந்து நாட்களில் குணமடையும். ஆனால் கருங்கிரந்தி உடலை கருமையாகப் புலப்படுத்தும். நாக்கு. உதடுகள் வறண்டு தொனி குறையும். மலமானது போகாது. குழந்தைக்கு மிகத் துன்பத்தைக் கொடுக்கும் பொல்லாத நோயாகும். குழந்தை உயிர் வாழ்வது கடினம்.

**"வேர்க் கொம்பு வசும்போடுள்ளி விளம்பிய**
**கடுக்காயிந்துப் பேர்க்கஞைஞ் சீர் வேப்பங்**
**கூரித மிள கசம தாகம் சீர்க்கடு வுலுவ மல்லி**
**திப்பலி யிவைகளெல்லாம். கார்ப்பெரு மரிசி**
**கூட்டிக் கருக்கிநீர் குடிக்கப் போமே"**
**(பரராசசேகரம் பாலரோகம் பாடல் 87)**

வேர்க் கொம்பு. வசம்பு. உள்ளி. கடுக்காய். இந்துப்பு. கருஞ்சீரகம். வேப்பங்கூர். மிளகு. ஓமம். கடுகு. உலுவா. மல்லி. திப்பிலி. பெருஞ்சீரகம். தக்க அளவாக கருக்கிய நீரைக் கொடுக்க மாந்தம் மாறும். பரராசசேகரம் பாலரோகத்தில் குறிப்பிடப்படும் மாந்தத்திற்கான சிகிச்சை சிறப்பாகச் செயற்படுவதை அனுபவத்தில் காணலாம். குழந்தை மருத்துவத்தில் கிரந்தி எண்ணெய். கொதியெண்ணெய். பெருங்கிரந்தி எண்ணெய். செவ்வரத்தம் பூஎண்ணெய். தாக்காளிச்சாற்றுக் கோரோசனை மாத்திரை. கஸ்தூரி மாத்திரை போன்றன வழங்கப்படுகின்றன.

கிரந்தி எண்ணெய். கொதியெண்ணெய். செவ்வரத்தம் பூஎண்ணெய் பெருங் கிரந்தி எண்ணெய் என்று பல பெயர்களில் குறிப்பிட்டு கூறப்படுவதற்குக் காரணம் கிடைக்கும் மூலிகைகளை கொண்டு அதற்கேற்ப செய்வதற்கும் பல்வேறு நோய் நிலைகளுக்கு ஏற்ப கொடுப்பதற்கும் உதவும். மேலும் கொதி எண்ணெய் குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதங்கள் வரைக்கும் தடுப்பு முறையாக **(Preventive)** கொடுப்பதுடன் அதன் பின்னர் கிரந்தி எண்ணெய் நோய் நீக்கத்திற்கும் **(Curative)** கொடுக்க உதவும்.

மகாஏலாதி. இராச ஏலாதி. மிருதசஞ்சீவினி. வசந்த குசுமாகரம் போன்ற மருந்துகள் சிறுவர்களுக்கு ஏற்படும் அதீத சுரம். அதீத சளி. சன்னி போன்ற தீவிர நிலைக ளில் அல்லது மரணத்தை நெருங்கும் நிலைகளில் உயிர் காக்கும் மருந்துகளாக பயன்படுத்துவதைக் காணலாம்.

# தமிழர்கள் நூற்றுக்கு நூறு விகிதம் வாழ்கின்ற ஒரு பிரதேசத்திலே அத்துமீறி பௌத்த விகாரை அடித்து நொருக்கப்பட வேண்டும் – பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்

பலவந்தமாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அந்தக் காணிகளுக்குள் படையினரின் பங்களிப்போடு பௌத்த விகாரை ஒன்று தையடியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரையால் காணிக்குச் சொந்தமான மக்கள் உள்நுழைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. 1990 காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் இலங்கை இராணுவம் ஆக்கிரமிப்புக்களை ஆரம்பித்து படிப்படியாக இந்தப் பிரதேசங்களை முழுமையாக ஆக்கிரமித்து அன்றைய காலத்திலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்டார்கள்.

சுமார் 30 ஆண்டுகளாக இந்த மக்கள் தங்களது காணிகளுக்குள் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. 2009இல் இனவழிப்பு மூலமாக யுத்தம். இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டு வந்த நிலையில். இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இந்தக் காணிகள் இருந்து கொண்டுள்ள போதே இந்தக் காணிகளுக்குள் பௌத்த விகாரைகள் இராணுவத்தால். ஆயுதப் படைகளால் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல நூற்றுக்கணக்கான மக்களின் காணிகள் இன்னமும் இவர்களின் ஆளுகைக்குள் இருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரைக்கு எதிராக அந்த பௌத்த விகாரை அகற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும். எங்களுடைய மக்களுக்குச் சொந்தமான காணிகள் அந்த மக்களிடம் மீளவும் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும். தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. கடந்த 2021ஆம் ஆண்டு இந்த விகாரை கட்டுவதற்கானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த வேளை. அரசாங்க முகவராக இருக்கக்கூடிய அங்கஜன் இராமநாதன் அவர்களின் தலைமையில் தெல்லிப்பளை பிரதேச சபையிலே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது இந்த விடயம் தொடர்பில் நாங்கள் கடுமையான எதிர்ப்பினை பதிவுசெய்திருந்தோம். இந்த விகாரை கட்டுவது நிறுத்தப்படவேண்டும் என்கிற எங்களுடைய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்தத் தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக உரிய தரப்புக்களுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டதற்கு அங்கஜன் அதற்கு ஒத்துழைக்கவில்லை. அவர் அதை ஒரு விவகாரமாக்காமல் மூடி மறைத்து விகாரை தொடர்ந்து கட்டப்படுவதற்கு உறுதுணையாக இருந்திருக்கின்றார் என்பதை காலப்போக்கில் எமக்கு உணரக்கூடியதாக இருக்கின்றது.

அந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுதிரண்டு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இது நிறுத்தப்படவேண்டும் என்று தீர்மானம் இயற்றிய பிற்பாடும் பல தடவைகள் நாங்கள் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும் இதற்குள் இரகசியமான முறையில் கட்டுமானங்கள் இடம்பெறுகிறது. அது விகாரைக் கட்டுமானம். அது நிறுத்தப்படவேண்டும் எனக் கோரிக்கைகளை முன்வைத்தபோதிலும் மிகவும் இரகசியமான முறையில் பொது மக்கள் இந்தப் பகுதிக்கு வந்து பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையிலே. இந்தக் கட்டுமானம் முடிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இது ஒரு சட்டவிரோதக் கட்டுமானம். இந்தக் கட்டுமானம் அகற்றப்பட வேண்டும். இது மக்களின் காணிகள். மக்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெறுகின்றது. விகாரை உத்தியோகபூர்வமாக திறக்கப்படக்கூடாது. அது நிறுத்தப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கடந்த புதன்கிழமையில் இருந்து நடைபெறுகிற இந்தப் போராட்டத்தை குழப்புவதற்கு தெல்லிப்பளை காவல்துறையினர். காங்கேசன்துறை காவில்துறை பிரிவு. பலாலி காவல்துறைப் பிரிவு என மூன்று பேரும் கூட்டாக இணைந்து சட்டவிரோதமாக காடைத்தனமான முறையிலே எங்களுடைய போராட்டத்தை நசுக்குவதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். எங்களை 03ஆம் திகதி இரவு அச்சுறுத்தும் விதமாக அந்த இடத்தில் நாங்கள் கொட்டகை ஒன்றை அமைக்க முற்பட்டபோது. கொட்டகை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தி. அந்தப் பணிகளை தடுத்து நிறுத்தியது மட்டுமல்லாமல். ஒரு இராணுவ அதிகாரி **"போரை வென்ற எங்களுக்கு உங்களை எப்படிக் கையாளவேண்டும்"** என்பது எங்களுக்குத் தெரியும் என கொலைவெறியுடன் கூறினார்.

நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். காண்டீபன் ஒரு சட்டத்தரணி. எம்மை ஒரு மனிதராகக் கூட மதிக்காமல் நாய்கள் போல அவர்கள் எங்களை நடத்தினார்கள். நாங்கள் அந்த இடத்திலிருந்து எழுந்து செல்லவேண்டும் என பல நெருக்கடிகளைக் கொடுத்தார்கள். எங்களைப் பொறுத்தளவில் போராட்டம் நடத்துவதற்கான சட்டபூர்வமான உரிமை எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் சட்டத்தை மதித்து இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம். நாங்கள் இங்கிருந்து போகமாட்டோம் விரும்பினால் நீங்கள் எங்களைக் கைது செய்யுங்கள் என்று கூறிய காரணத்தினாலே எங்களை விட்டுவிட்டு ஏனையவர்களை அச்சுறுத்தி விரட்டிவிட்டார்கள். அதன் பின்னர் அன்றைய தினம் நீதிமன்றத்தில் பொய்யான தரவுகளை வழங்கி சட்டவிரோதமான விகாரையை சட்டபூர்வமான விகாரை போன்று பொய்யான தரவுகளை வழங்கி நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி எங்களுடைய போராட்டத்தை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். இருந்தாலும் எங்களது சட்டத்தரணிகளான சுகாஸ் மற்றும் மகிந்தன் போன்றோர் எடுத்த முயற்சியினாலே இந்தப் போராட்டம் நடத்தலாம் என்கிற அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் பொலிசார் நீதிமன்றத்தை ஏமாற்றும் விடயத்தில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்பது எமக்கும் ஏமாற்றமே. இதற்கு எதிராக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். இந்த இடத்தில் நடைபெறும் வழிபாடுகள் என்பது இனத்தினுடைய நல்லிணக்கத்தை சீரழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை.

தமிழர்கள் நூற்றுக்கு நூறு விகிதம் வாழ்கின்ற ஒரு பிரதேசத்திலே அத்துமீறி விகாரைகளைக் கட்டி இராணுவத்திற்கு சிவில் உடைகளை அணிவித்து அவர்களைக் கொண்டு பௌத்த குடிகளை அமைத்து தமிழினத்தை வெறுப்பேற்றுகின்ற தமிழினத்தை அச்சப்படுத்துகின்ற வகையில் இந்தக் காவல் துறை ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. இந்தச் செயற்பாட்டை நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த விகாரை இடித்து அழிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தொடர்ந்தும் உறுதியாகக் குரல் கொடுப்போம். மீளவும் இந்த மக்களுடைய காணிகள் அவர்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக நின்று போராடுவோம் என உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.



# மகளிர் பக்கம்

## அழகை அதிகரிக்கும் ரோஸ் வாட்டர்



உங்கள் சரும அழகை ஆரோக்கியமான முறையில் அதிகரிக்க பயன்படும் பொருட்களில் ஒன்று ரோஸ் வாட்டர். இதில் அதிக சத்துக்கள் நிறைந்துள்ளதால் சரும பிரச்சனைகளை தீர்க்கிறது. உங்கள் சரும அழகை ஆரோக்கியமான முறையில் அதிகரிக்க பயன்படும் பொருட்களில் ஒன்று ரோஸ் வாட்டர். இதில் அதிக சத்துக்கள் நிறைந்துள்ளதால் சரும பிரச்சனைகளை தீர்க்கிறது. அதுமட்டுமல்ல முடியின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதை முறையாக பயன்படுத்தி வரும் போது சருமத்தில் உள்ள எரிச்சல், அதிகப்படியான எண்ணெய், வறட்சி, கருமை ஆகியவை நீங்கி சருமம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

**1) தினமும் குளிக்கும் போது நீரில் சிறிது ரோஸ் வாட்டரை சேர்த்து கலந்து குளித்தால், சருமம் மென்மையாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும்.**

**2) வறட்சியான சருமம் உள்ளவர்கள், ரோஸ் வாட்டரை சருமத்திற்கு பயன்படுத்தி வந்தால், சருமம் வறட்சியின்றி, மென்மையோடு அழகாக இருக்கும்.**

**3) ரோஸ் வாட்டர் உள்ள பாட்டிலை அரை மணிநேரம் குளிர்சாதன பெட்டியில் வைத்து, பின் அதனை காட்டனில் நனைத்து கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் ஊற வைத்தால், கண்களில் உள்ள வீக்கம் குறைந்து, கண்கள் அழகாக மாறும்.**

**4) இரவில் படுக்கும் போது ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து முகத்தை துடைத்து எடுத்தால் மேக்கப் நீங்குவதோடு சருமமும் மென்மையோடு இருக்கும்.**

**5) ரோஸ் வாட்டர் சருமத்தின் நிறத்தையும் அதிகரிக்க உதவும். இது சருமத்தில் உள்ள சுருக்கங்களைப் போக்கி, சருமத்தை இளமையாக வெளிக்காட்டும்.**

**6) பொதுவாக வெளியே சென்று வீட்டிற்கு வந்தவுடன் ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து, முகம் மற்றும் கழுத்தை துடைத்து எடுங்கள். இதனால் முகத்தில் அழுக்குகள் முற்றிலும் வெளியேறி, முகம் புத்துணர்ச்சியுடன் பொலிவோடு காணப்படும்.**

**7) கோடையில் முகம் விரைவில் சோர்ந்து, பொலிவிழந்து காணப்படும். அப்போது ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து முகத்தை துடைத்து எடுத்தால் முகம் உடனே புத்துணர்ச்சியுடன் காணப்படும்.**

## பப்பாளி பழத்தின் மருத்துவ குணாங்கள்!!

பாப்பாளி தற்போது எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் பழம். மலிவானது. இனிப்பானது. எல்லோரும் அறிந்தது. சத்துக்கள் மிகுந்தது. மஞ்சள். சிவப்பு நிற பழங்களாகவும். சில சமயம் பச்சை கலந்த நிறத்திலும் உள்ளது. வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய பழம் இது. இதிலும் விட்டமின் ஏ உயிர் சத்து நிறைய இருக்கிறது. பல் சம்மந்தமான குறைபாட்டிற்கும். சிறுநீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும். பப்பாளி சாப்பிட்டால் போதும். மேலும் நரம்புகள் பலப்படவும், ஆண்மை தன்மை பலப்படவும், ரத்த விருத்தி உண்டாகவும், ஞாபக சக்தியை உண்டு பண்ணவும் பப்பாளி சாப்பிடுங்கள். அடிக்கடி பப்பாளி பழத்தினை உண்டு வருபவர்கள் எவ்வகை நோய்க்கும் ஆளாக நேரிடாது. எந்த வகையான தொற்று நோய் பரவினாலும், அது இவர்களை தாக்காது. பப்பாளி பழத்தில். இயற்கையாகவே விஷக்கிருமிகளை கொல்லும் சக்தி உள்ளது.

### மருத்துவக் குணங்கள்

**பப்பாளி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும்.**

**எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும். பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர, குண்டான உடல் படிப்படியாக மெலியும்.**

**தொடர்ந்து பப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும். பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும்.**

**நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து, தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.**

**பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும்.**

**பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும்.**

**பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும்.**

**பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும்.**

**பப்பாளி இலைகளை அரைத்து கட்டி, மேல் போட்டு வர கட்டி உடையும்.**

**பப்பாளி விதைகளை அரைத்து, தேள் கொட்டிய இடத்தில் பூச வலி, விஷம் இறங்கும்.**

**பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும்.**

**100 கிராம் பச்சைக் காயான பப்பாளியில் 32 மில்லி கிராமும், நன்றாகப் பழுத்ததில் 68 முதல் 136 மில்லி கிராமும், விட்டமின் சி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.**

**பழுக்காத பச்சைப் பப்பாளித் துண்டுகள் அல்லது சாறை அருந்தினால், குடலிலுள்ள வட்டப்புழுக்கள் வெளியேறும்.**

**கல்லீரல் கோளாறுகளுக்கும் பப்பாளி மருத்துவரீதியாக உதவி சரிசெய்யும். முறையான மாதவிலக்கு ஒழுங்குக்கு பப்பாளி உண்பது சரியான வழி.**

**அடிவயிற்றுப் பிரச்னைகளுக்கு பப்பாளியே மிகச் சிறந்த மருந்து.**

**வயிற்றுக் கடுப்பு, செரிமானமின்மை, அமிலத்தொல்லை, மலச்சிக்கல் இவற்றுக்கெல்லாம் அருமருந்து பப்பாளி.**

**முகப்பரு உள்ளவர்கள், பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக முகத்தில் தேய்க்க வேண்டும்.**

**இது முகப்பருக்களைப் போக்கி, முகச் சுருக்கங்களையும் நீக்கி, பொலிவு கூட்டும் பப்பாளிப்பழம் விலை குறைவு ஆனால் அது தரும் பயன்களோ ஏராளம்.**

**பப்பாளிப் பழத்தை தேனில் கலந்து சாப்பிட்டால் நரம்பு தளர்ச்சி குணமாகும்.**

## பெண்கள் வாழ்க்கையில் சந்திக்கும் சவால்களை சமாளிக்க தன்னம்பிக்கை அவசியம்...



வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிரமங்களை எளிதாக கையாள்வதற்கும், தேர்ந்தெடுக்கும் வேலையை திறமையாக செய்து முடிக்கவும் மனம் தெளிந்த நிலையில் இருக்க வேண்டும். ஏதேனும் மன குழப்பங்களுக்கு ஆளானால் எந்தவொரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிக்க முடியாது.

எளிதில் உணர்ச்சி வசப்பட்டாலும் எந்த காரியமும் கைகூடாது. உணர்வுகளை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். எதிர்மறையான சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது. கோபம், சோகம், வேதனை, மன அழுத்தம் போன்றவை உணர்வுகளை தடுமாற வைக்கும். வாழ்க்கையில் சந்திக்கும் சவால்களை சமாளித்து உணர்வுகளை நிர்வகிப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். அது உணர்ச்சிகளை கையாள்வதற்கு உதவிகரமாக அமையும். சந்தோஷமாக இருந்தாலோ, மனக்கவலை அடைந்தாலோ உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு தயங்கக்கூடாது. உங்களுக்கு நெருக்கமானவர்களிடம் அதனை பகிர்ந்து கொள்ளுங்கள். ஒருபோதும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தாதீர்கள்.

ஏனெனில் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் மன அழுத்தத்திற்கு ஆளாக நேரிடும். ஏதாவதொரு சூழலில் மன நெருக்கடிக்கு ஆளானால் சிறிது நேரம் தனிமையில் இருக்கலாம். எந்த வேலையிலும் ஈடுபடாமல் மனதை அமைதியாக வைத்திருக்கலாம்.

அந்த சமயங்களில் அவசரப்பட்டு எந்தவொரு முடிவையும் எடுக்கக்கூடாது. மனதை வேறு செயல்களில் ஈடுபடுத்தலாம். அல்லது ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். மன அழுத்தம்தான் ஆரோக்கியத்திற்கு மிகப்பெரிய எதிரி. ஒருவேளை மன அழுத்தத்திற்கு ஆளானால் அதில் இருந்து மீள்வதற்குரிய வழிமுறைகளை கற்றுக்கொள்ள வேண்டும். மன அழுத்தத்தைக் குறைக்க உதவும் பயிற்சிகளில் ஈடுபடலாம்.

ஆழ்ந்த சுவாசம், தியானம், உடற் பயிற்சி போன்ற உடலை தளர்வடைய செய்யும் பயிற்சிகளில் கவனம் செலுத்தலாம். விளையாடுவதற்கும் போதிய நேரம் ஒதுக்குங்கள். குழந்தைகள்தான் ஓடி ஆடி விளையாட வேண்டும் என்றில்லை. அவர்களுடன் சேர்ந்து குழு விளையாட்டுகளில் ஈடுபடலாம்.

மனதிற்கு பிடித்தமான எந்தவொரு விளையாட்டையும் தயங்காமல் மேற்கொள்ளலாம். நடனமும் ஆடலாம். தவறாமல் உடற்பயிற்சி செய்வது, ஆரோக்கியமான உணவை உண்பது, போதுமான நேரம் தூங்குவது போன்றவை மன நலனை பாதுகாக்கவும், உணர்வுகளை சம நிலையில் பராமரிக்கவும் உதவும். மன நெருக்கடியில் இருக்கும் சமயங்களில் நெருக்கமானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள்.


அவர்களுடன் குழு விவாதங்களிலும் ஈடுபடலாம். வெளி உலக தொடர்பை வளர்த்துக்கொள்வதும் அவசியமானது. தொண்டு நிறுவனங்களில் சேர்ந்து பணி புரியலாம். தன்னார்வலர்களாக மாறி அவ்வாறு சமூக சேவைகள் புரிவது மனதிற்கு ஆத்ம திருப்தியை தரும். அர்த்தமுள்ள செயல்களில் நேரத்தை செலவிடுகிறோம் என்ற மன நிறைவும் கிடைக்கும். உங்கள் நலனில் அக்கறை கொள்பவர்களுடன் சிரித்து பேசி மகிழ்வதும் உணர்ச்சி ஆரோக்கியத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க துணை புரியும்.





அப்பிள் சீடர் வினிகரை நீரில் கலந்து, அந்நீரால் வாயை கொப்பளிக்க வேண்டும். இதனால் ஆப்பிள் சீடர் வினிகரில் உள்ள ஆசிட்டுகளானது பற்களில் தங்கியுள்ள கறைகளை நீக்குவதோடு, வாயில் பாக்டீரியாக்கள் இருக்கும், அவற்றையும் அழித்து வெளியேற்றிவிடும்.

# உலக பத்திரிகை சுதந்திர தினம்



ஊடகங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாகவும் கருத்து சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் விதமாகவும் ஒவ்வொரு வருடமும் மே 3ம் திகதி உலக ஊடக சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதில் ஊடகங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. பக்கச்சார்பற்ற உண்மை தன்மையோடு செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்கையில் ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் கொஞ்சமல்ல. அந்த வகையில் அநீதிகளை சுட்டிக்காட்டிய எத்தனையோ பத்திரிகை நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்படுவதும் தீவைத்து சேதமாக்கப்படுவதும் மேலும் ஊடகவியலாளர்கள் கடத்தி படுகொலைசெய்யப்படுவதும் நாம் எல்லோரும் அறிந்ததே இப்படியான கொடுமையான வரலாறுகள் நம் இலங்கை நாட்டிற்கும் உண்டு.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் 19வது திருத்தத்தில் உள்ள பேச்சுரிமையை உறுதிப்படுத்தும் விதமாகவும் அவற்றை சர்வதேச நாடுகளுக்கு நினைவூட்டும் விதமாகவும் மே 3ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் உலக ஊடக சுதத்திர தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. சுதந்திரமானதும் பல்தன்மையானதுமான ஊடக துறையை ஊக்குவித்தல் என்னும் தொனிப்பொருளில் யுனெஸ்கோ கருத்தரங்கு ஒன்று 1991 ஏப்ரல் 21 தொடக்கம் மே 3 வரை நமீபியாவில் உள்ள வைன்ட்ஹோக் நகரில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பத்திரிகை சுதந்திரத்திற்கான பிரகடனமொன்று ஆபிரிக்க ஊடகவியலாளர்களால் தயாரிக்கப்பட்டது **Windhoek Declaration** எனும் இப்பிரகடனம் 1991ம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தின் 26வது அமர்வில் அங்கீகரிக்கப்பட்டது.

உலகின் ஊடகங்கள் பணத்திற்காக உண்மையை மறைக்கின்றன என்றால் . தமிழ் ஊடகங்கள் பணத்திற்காக தமிழர்களின் உயிரையும் உரிமைகளையும் பலி கொடுப்பதில் போட்டி போட்டு செயல்படுகின்றன. தமிழரின் அழிவே முதல் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் சில நாளிதழ்கள் பணத்திற்காக தமிழரின் அழிவை கண்டு கொள்ளாமல் இருக்க பேரம் பேசும் முன்னணி தொலைக்காட்சி வரை இன்று தமிழர் ஊடகம் எதுவும் தமிழர் நலன் சார்ந்து இல்லை. தமிழர் நலனுக்காவே ஆரம்பிக்கப்பட்ட சில தமிழ் நாளிதழ்கள் கூட இன்று தமிழர் வாழ்வை விற்று பிழைக்கும் நிறுவனங்களாக மாறி விட்டன .

பின் 1993ம் ஆண்டு இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் மே 3ம் திகதி உலக ஊடக சுதந்திர தினமாக அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இத்தினத்தில் ஊடக சுதந்திரத்தில் பெரும் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு யுனெஸ்கோ நிறுவனம் **'கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது'** என்ற விருதை வழங்கி வைக்கிறது. இவ்விருதானது கொலம்பிய பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாஸாவின் நினைவாக வழங்கப்படுகிறது. இவர் 1986 டிசம்பர் 17ம் திகதி தனது அலுவலகம் முன்பாக வைத்து படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


இலங்கையில் கொல்லப்பட்ட பத்திரிக்கையாளர்கள். ஊடகப் பணியாளர்கள் இலங்கையில் ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி பார்த்தால். இந்த காலகட்டத்தில் இலங்கையில் 44 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் அல்லது காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள். இவை தவிர. கைதுகள். தடுத்து வைப்புகள். தாக்குதல்கள். பயமுறுத்தல்கள். மிரட்டல்கள். துன்புறுத்தல்கள். தொல்லைக் கொடுத்தல்கள் போன்றவைகளும் நடந்திருக்கின்றன.

அந்த வகையில் இலங்கையில் கொல்லப்பட்ட . காணாமல் ஆக்கப்பட்ட பத்திரிகையாளர்களாக ஐயாதுரை நடேசன். கந்தசாமி ஐயர் பாலநடராஜா. லங்கா ஜெயசுந்தெரா. தர்மரத்தினம் சிவராம் (தராகி).கண்ணமுத்து அரசகுமார்.ரேலங்கி செல்வராஜா.டேவிட் செல்வரட்னம்.யோககுமார் கிருஷ்ணப்பிள்ளை. எல்.எம். ஃபலீல்.கே. நவரட்னம்.சுப்பிரமணியம் சுகிர்தராஜன். எஸ்.டி.கணநாதன். ராஜரட்னம்ரஞ்சித்குமார். சம்பத் லக்மல் டி சில்வா. மரியதாசன் மனோஜன்ராஜ். சதாசிவம் பாஸ்கரன்.சின்னத்தம்பி சிவமகராஜா. எஸ். ரவீந்திரன். சுப்பிரமணியம் ராமச்சந்திரன். சந்திரபோஸ் சுதாகர். செல்வராசா ராஜிவர்மன். சகாதேவன் நிலக்சன். அந்தோணிப்பிள்ளை ஷெரின் சித்திரஞ்சன். வடிவேலு நிர்மலராஜ்.இசைவிழி செம்பியன் (சுபாஜினி). சுரேஷ் லிம்பியோ.டி. தர்மலிங்கம்.டபிள்யூ. குணசிங்கே.பரணிரூபசிங்கம் தேவகுமார். முகமத் ரஸ்மி மகரூப். ரசியா ஜெய்ந்திரன். லசந்தா விக்கிரமதுங்கே. புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி. சசி மதன். மகாலிங்கம் மகேஸ்வரன். அன்றன். ராஜ்குமார் டென்சே.ஜெயராஜா சுசித்ரா (சுகந்தன்).மாரியப்பு அந்தோணிகுமார். துரைசிங்கம் தர்ஷன்.இசைப்பிரியா.திருகுலசிங்கம் தவபாலன்.பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் காணப்படுகின்றனர்.

இலங்கையை பொறுத்த வரையில் பத்திரிகை சுதந்திரம் என்பது வாய்ப்பேச்சளவில் கூட இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு சம்பவம் நடந்தால் அச்சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று உண்மையை ஆராய்ந்து ஆதாரங்களை திரட்டி அதன் பின் செய்தியை வெளியிடுவதே ஊடக தர்மமாகும். அந்நிலையானது இலங்கையில் பெரும்பாலும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆட்சியாளர்களின் அடக்குமுறையில் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் மாத்திரமே எவ்வித இச்சுறுத்தலும் இன்றி இயங்க முடிகிறது. அது தமிழ் ஊடகங்கள் என்றாலும் சரி சிங்கள ஊடகங்கள் என்றாலும் சரி. போர்காலங்களில் யுத்தம் நடைபெற்ற இடங்களுக்கு ஊடகவியலாளர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. யுத்தம் முடிந்த பிறகும் வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத ஒரு பயங்கர நிலையே காணப்பட்டது. இலங்கையில் ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டதும் கடத்தி படுகொலை செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்தன. இலங்கையின் ஊடக அடக்குமுறையின் கறைபடிந்த வரலாறானது 1990ம் ஆண்டு ஊடகவியலாளர் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கிறது என குறிப்பிடலாம். அதன் பின் தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியராக இருந்த தமிழ் ஊடகவியலாளர் தராகி சிவராம் 28 ஏப்ரல் 2005 அன்று கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். அங்கிருந்து கொலைபட்டியல் நீண்டு கொண்டு வருகிறது. இன்றுவரை அந்த வரிசையில் திருகோணமலை மாணவர்களின் படுகொலையை அம்பலப்படுத்திய உதயன் சுடர்ஒளி பத்திரிகை ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுஜிதராஜ் கொலை செய்யப்பட்டார். பின்னர் 2006ம் ஆண்டு உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் புகுந்த சிலர் அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இருவரை சுட்டுக் கொன்றனர். இச்சம்பவம் ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படுகொலை என வர்ணிக்கப்பட்டது. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் ஊடக சுதந்திரம் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்பதை கார்டுன் கலைஞரும் ஊடகவியலாளருமான பிரகீத் எக்கினியாகொட காணாமல் போன சம்பவம் உணர்த்தியது. அச்சம்பவத்திலும் கூட ஊடகவியலாளர் பிரகீத் எக்கினியாகொட தானாகவே காணாமல் போனதாகவும் அவர் யாராலும் கடத்தப்படவில்லை என்றும் அரசாங்கத்தால் அறிக்கையிடப்பட்டது.

2009 ஜனவரி 08ம் திகதி சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கா இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார். ஆனால் அவர் இறப்பதற்கு முன் தான் கொலை செய்யப்படலாம் என்று முன்கூட்டியே தெரிவித்திருந்தார் **("When finally I am killed, it will be the government that kills me." – Lasantha Wickrematunge, Editor of the Sunday Leader")** என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தினமின பத்திரிகையின் மூத்த ஊடகவியலாளர் பொட்டல ஜயந்த கடத்தப்பட்டு தாக்கப்பட்டு வீசப்பட்டிருந்தார். அதனால் அவர் உயிர் பாதுகாப்பிற்காக நாட்டை விட்டு வெளியேறினார். உயிராபத்தின் காரணமான பல தமிழ் ஊடகவியலாளர்களும் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் தஞ்சமடைந்தனர். அவ்வாறு வெளியேறிய ஊடகவியலாளர்கள் சிலர் தாம் குடியேறிய நாடுகளின் ஊடகத்துறையில் இணைந்து பணியாற்றினார்கள். அதன் பின்னர் சிங்கள தொலைக்காட்சி மற்றும் ரேடியோ நிறுவனமான சியந்த குண்டுத்தாக்குதலுக்கு உள்ளானது. சொல்லப்போனால் மக்கள் அரசுக்கெதிரான செய்திகளை அறியாமல் இருக்க மேற்கொள்ளப்பட்ட உத்திகளே இவை. மேலும் பிபிசி இலங்கை வானொலி ஊடாக ஒலிபரப்பப்பட்ட போதும் அது பல தடவைகள் தடைப்படுத்தப்பட்டது. பிபிசி தமிழ் சேவையில் அரசாங்கம் பற்றி விமர்சிக்கும் செய்திகளை ஒலிபரப்பும் போது அது நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக வேறு இசை ஒளிபரப்பப்பட்டது. பிபிசி சிங்கள சேவை அடிக்கடி தடைபட்டது.

முக்கியமாக ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் அரசுக்கு சார்பாக இயங்க நிர்பந்திக்கப்பட்டார்கள். இலங்கை ஊடகவரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் 2010 ஆண்டு ஊடக சுதந்திர தினமான மே 3ம் திகதி விடுதலை செய்யப்பட்டதாகும். ஆனால் அதற்கு காரணம் அமெரிக்க அதிபர் இலங்கையில் ஊடக ஒடுக்குமுறை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் 20 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட திஸ்ஸநாயகம் சுட்டிக்காட்டியிருந்தமையாகும். இச்சம்பவம் இலங்கையின் கறைபடிந்த ஊடக அடக்குமுறையை மறைப்பதற்காகும். எது எப்படியாயினும் நீதிக்காக தமது இன்னுயிரை நீத்த ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க முடிந்தும் கூட அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது ஊடகம் மீதான அடக்குமுறையை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. அந்த வகையிலாக மறுக்கப்படும் பத்திரிகைகளுக்கான சயாதீனத்தை நிறுவ வேண்டும் என்பதற்காக வருடா வருடம் பத்திரிகை சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. இன்று மே 03 ம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினம் இன்றாகும். இன்றைய நாளில் சுதந்திர ஊடகத்திற்காக உயிர்நீத்த அத்தனை ஊடக கனவான்களையும் நினைவு கூறுகின்றோம்.



**"ஊடகவியலாளர் தராகி சிவராம் 28 ஏப்ரல் 2005 அன்று கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். அங்கிருந்து கொலைபட்டியல் நீண்டு கொண்டு வருகிறது......."**

# விளையாட்டு



## ஒலிம்பிக், உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற டோரி போவி காலமானார்!

பெண்களுக்கான குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் ஒலிம்பிக் பதக்கங்கள் வென்றவரும் முன்னாள் உலக சம்பியனுமான அமெரிக்க வீராங்கனை டோரி போவி தனது 32ஆவது வயதில் காலமானார்.

ரியோ 2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பெண்களுக்கான **4 x 100** மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்ற டோரி போவி, அதே ஒலிம்பிக் விழாவில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றிருந்தார்.

ஒரு வருடம் கழித்து லண்டனில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும், **4 x 100** மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியிலும் டோரி போவ் தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தார்.

பெய்ஜிங் 2015 உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வென்றெடுத்த வெண்கலப் பதக்கமே அவரது முதலாவது சர்வதேச பதக்கமாகும்.

விளையாட்டில் டோரி போவி கொண்டிருந்த அர்ப்பணிப்பு அளப்பரியது என குறப்பிட்ட ஐக்கிய அமெரிக்க தட கள சங்கம், அவரது மறைவு பேரிழப்பு எனவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சமகால மற்றும் முன்னாள் வீர, வீராங்கனைகள் பலர் டோரி போவியின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ளனர்.

## 38ஆவது “ஷிஸீஓக்கா” சர்வதேச மெய்வல்லுநர் போட்டி

ஜப்பானில் நடைபெற்ற 38ஆவது “ஷிஸீஓக்கா” சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த கயன்திகா அபேரட்ன முதலாம் இடத்தையும் அருண தர்ஷன 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் “கயன்திகா” அபேரட்ன முதலாம் இடத்தையும் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அருண தர்ஷன 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

38ஆவது “ஷிஸீஓக்கா” சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகள் ப்றீஃபெக்சுரல் “ஷிஸீஓக்கா” விளையாட்டரங்கில் மே 1ஆம் திகதி ஆரம்பமாகி 3ஆம் திகதி நிறைவடைந்தது.

3 இறுதிப் போட்டிகளைக் கொண்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடைசி இறுதிப் போட்டியில் பங்குபற்றிய கயன்திகா 2 நிமிடங்கள், 04.35 செக்கன்களில் நிறைவு செய்து முதலாம் இடத்தைப் பெற்றார்.

அத்துடன் 24 வீராங்கனைகள் பங்குபற்றிய 3 இறுதிப் போட்டிகளுக்கான ஒட்டு மொத்த நிலையிலும் கயன்திகா முதலாம் இடத்தைப் பெற்று 1000 அமெரிக்க டொலர்கள் பணப்பரிசை தனதாக்கிக்கொண்டார்.


இப் போட்டியில் வீராங்கனைகளான ஜப்பான் ஆய்ரே இக்கேஸாக்கி (2:04.93 செக்) இரண்டாம் இடத்தையும் யூக்கி ஹிரோட்டா (2:05:59 செக்.) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இதேவேளை, ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் அருண தர்ஷன ஒட்டுமொத்த நிலையில் 3ஆம் இடத்தைப் பெற்றார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்திற்கான 3ஆவது இறுதிப் போட்டியில் பங்குபற்றிய அருண தர்ஷன 45.59 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து 2ஆம் இடத்தைப் பெற்றார். ஆனால், 24 வீரர்கள் பங்குபற்றிய 3 இறுதிப் போட்டிகளுக்குமான ஒட்டுமொத்த நிலையில் தர்ஷன 3ஆம் இடத்தையே பெற்றார்.

ஜப்பான் வீரர்களான கென்டரோ சாட்டோ (45.31 செக்) முதலாம் இடத்தையும் யுக்கி ஜோசப் நக்காஜிமா (45.46 செக்) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

“ஷிஸீஓக்கா” சர்வதேச மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பரிசுளே வழங்கப்படுகிறது.




## 2027 உலகக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டிகள் கத்தாரில்

2027 ஆம் ஆண்டில் ஆண்களுக்கான உலகக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்தும் உரிமையை கத்தார் பெற்றுள்ளது.

2026 ஆம் ஆண்டின் பெண்களுக்கான உலகக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டிகளை ஜேர்மனி நடத்தும் எனவும் சர்வதேச கூடைப்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.




கடந்த வருடம் முதல் தடவையாக உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்திய கத்தார். 2027 முதல் முதல் தடவையாக கூடைப்பந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தலைநகர் தோஹாவில் தற்போதுள்ள அரங்குகளில் இப்போட்டிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட உலகக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் ஆகஸ்ட் 25 முதல் செப்டெம்பர் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஜப்பான் ஆகியன இப்போட்டிகளை கூட்டாக நடத்துகின்றன. இவ்வருட உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள 32 நாடுகளில் கத்தார் இடம்பெறவில்லை.

## புன்னகையுடன் விடை கொடுத்த தோனி!

லக்னௌ அணிக்கு எதிரான போட்டியில் கடைசி ஆட்டம் குறித்து தோனியிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவர் சிரித்தபடி அளித்த பதிலுக்கு திடலில் கூடியிருந்த ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். லக்னௌ சூப்பர் ஜெயின்ட் அணிக்கு எதிரான டி-20 ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி டாஸ் வென்றது. லக்லௌ ஏகனா திடலில் நடைபெற்று வரும் இந்த ஆட்டத்தில், வர்ணனையாளர்கள் தோனியிடம் கேள்வி எழுப்பினர்.



முன்னாள் கிரிக்கெட் வீரரும் கிரிக்கெட் வர்ணனையாளருமான டேனி மோரிசன் இது உங்கள் கடைசி ஆட்டம். எந்த அளவுக்கு அனுபவித்து விளையாடுகிறீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு தோனி, இது என்னுடைய கடைசி ஆட்டம் என்று நீங்கள்தான் முடிவு செய்துள்ளீர்கள். நான் இல்லை என சிரித்தபடி பதிலளித்தார்.

இந்த பதிலால் திடலில் ஆட்டத்தைப் பார்க்க வந்த ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்து கூச்சலிட்டனர். தோனி தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இதுவரை 4 முறை சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

இனி வரும் காலங்களிலும் தோனி தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி களமிறங்கும் என்பதை தோனி பதில் மூலம் ரசிகர்கள் சமூக வலைதளங்களில் பதிவு செய்து வருகின்றனர்.

# உலக வலம்

## உக்ரைனுக்கு மேலும் 300 மில்லியன் டொலர் ஆயுத உதவி

உக்ரைன் மீது ரஷ்யா கடந்தாண்டு பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்தது. இந்தப் போர் தொடங்கி ஓராண்டு நிறைவடைந்துள்ளது. போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள், தளவாட உதவிகளைச் செய்து வருகின்றன.



இந்நிலையில், உக்ரைனுக்கு புதிதாக சுமார் 300 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை அமெரிக்கா அறிவித்துள்ளது. இதில், ரொக்கெட் லொஞ்சர்கள், மேலதிக ஹோவிட்சர்கள், பீரங்கிக்கான வெடிமருந்துகள் ஆகியவையும் இத்தொகுப்பில் அடக்குகின்றன. ரஷ்யா உக்ரைன் மீது படையெடுக்க ஆரம்பித்ததிலிருந்து இதுவரை அமெரிக்கா 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பாதுகாப்பு உதவிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகில் சிறுவர் திருமணத்தை ஒழிக்க 300 வருடங்கள் செல்லும் – யுனிசெப்

தெற்கு ஆசியாவில் சிறுவர் திருமணங்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்ற போதிலும், இதே வேகத்தில் சென்றால் தெற்கு ஆசியாவில் சிறுவர் திருமணத்தை ஒழிப்பதற்கு மேலும் 55 ஆண்டுகள் செல்லும் என யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகளாவிய ரீதியில் தற்போதைய வேகத்தில் சிறுவர் திருமணத்தை ஒழிப்பதற்கு மேலும் 300 ஆண்டுகள் செல்லும் என யுனிசெப் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தெற்காசியாவில் இதற்கு 55 ஆண்டுகள் செல்லும் எனவும் யுனிசெப்பின் தெற்காசிய பிரிவு தெரிவித்துள்ளது. யுனிசெப்பின் தெற்கு ஆசியப் பிரிவு இது தொடர்பாக அன்று (03) விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தெற்கு ஆசியாவில் சிறுவர் திருமணம் சீராக குறைந்த வருகிறது. தெற்கு ஆசியாவில் சிறுமிகள் திருமணம் செய்வது 46 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக குறைந்துள்ளது. இந்தியாவில் அதிகமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பங்களாதேஷ், மாலைதீவுகள், பாகிஸ்தானிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.எனினும், உலகின சிறுவர் திருமணத்தில் ஏறத்தாழ அரைவாசி (45 சதவீதம்) இப்பிராந்தியத்தில் நடக்கிறது. இந்தியாவில் சிறுவர் திருமணத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், உலகில் நடைபெறும் சிறுவர் திருமணத்தில் மூன்றிலொரு பங்கு இந்தியாவில் நடந்துள்ளது. உலகில் தற்போது உள்ள சிறுமிகள் மற்றும் பெண்களில் 640 மில்லியன் பேர் சிறுவர் பராயத்தில் திருமணம் செய்தவர்களாக உள்ளனர். அவர்களில் 290 மில்லியன் பேர் தெற்காசியாவில் உள்ளனர் என அண்மைய மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. தெற்கு ஆசியாவில் பங்களாதேஷில் சிறுவர் திருமணங்களின் சதவீதம் பங்களாதேஷில் சிறுவர் திருமணங்களின் சதவீதம் அதிகமாக (50 சதவீதத்துக்கும் அதிகம்) உள்ளது. ஆகக் குறைவாக மாலைதீவுகளில் 2 சதவீதமாக உள்ளது.

தெற்காசியாவில் சிறுவயதில் திருமணம் செய்த பெண்கள் அதிகமாக வறிய குடும்பங்களில் உள்ளதுடன், குறைந்த கல்வியறிவு கொண்டவர்களாகவும் தூரப்பிரதேசங்களில் வசிப்பவர்களாகவும் உள்ளனர். உதாரணமாக பாகிஸ்தானிலுள்ள சிறுவயதில் திருமணம் செய்த பெண்களில் நான்கில் ஒரு பங்கினர் ஒரு போதும் பாடசாலைக்குச் சென்றதில்லை. சிறுவயதில் திருமணம் செய்த சிறுமிகள், உடனடி மற்றும் ஆயுட்கால பின்விளைவுகளை எதிர்கொள்கின்றனர். அவர்கள் பாடசாலைக் கல்வியை தொடர்வதற்கான சாத்தியம் குறைவாக உள்ளது. ஆரம்ப காலத்திலேயே கருத்தரித்தல், அதனால் பிரசவ சிக்கல்கள் மற்றும் மரணவீதம் அதிகரித்தலை எதிர்கொள்கின்றனர். இத்திருமணங்கள் சிறுமிகளை அவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்தக்கூடும். இதனால், அவர்களின் உளவியல் ஆரோக்கியம் மற்றும் நலன்களில் கடும் பாதிப்பை எற்படுத்துகிறது எனவும் யுனிசெப் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தானில் ஹிந்து இளைஞர் கொலை!



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் ஹிந்து இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் பொலிஸார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ஹிந்து இளைஞரான கமல் கிஷண், ஃபர்மான் ஷா என்ற காவலரால் சில நாள்களுக்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த 1 ஆம் திகதி இரவு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த இளைஞரை வழிமறித்த காவலர் அவரிடமிருந்து ரூ.80,000 யை பறித்துக் கொண்டுள்ளார். அதைத் தடுக்க முயன்ற இளைஞர் மீது பொலிஸார் துப்பாக்கியால் சுட்டுள்ளார். அதில் அந்த இளைஞர் உயிரிழந்தார்.

இந்த முறைகேட்டை மறைக்க இளைஞரின் நண்பர் மீது பொய் வழக்கு பதியப்பட்டுள்ளதாக இளைஞரின் தந்தை புகார் தெரிவித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் பொலிஸார் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சிந்து மாகாணத்தில் சிறுபான்மையினரான ஹிந்துக்கள் அதிக எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர்.அவர்கள் கொலை, பாலியல் வன்கொடுமை, அச்சுறுத்தல் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

## ருவாண்டாவில் கனமழை

கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேல் கனமழை பெய்து வருகிறது. ருவாண்டாவின் வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் இடைவிடாமல் மழை பெய்தது. கனமழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 136 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக ருவாண்டா அரசு தெரிவித்துள்ளது. ருவாண்டாவில் மழையினால் விவசாய நிலங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. இதற்கிடையில், வரும் நாட்களில் ருவாண்டாவில் கனமழை பெய்ய இருப்பதாக அந்நாட்டு வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈர நிலங்கள் மற்றும் பிற ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் மக்களை இடம்பெயருமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

ருவாண்டாவில் கடந்த சில ஆண்டுகளில் இடம்பெற்ற மிக மோசமான இயற்கை பேரிடர் பாதிப்பாக இது கருதப்படுகிறது. அண்டை நாடான உகாண்டாவிலும் கனமழை பெய்து வருகிறது. மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 பேர் பலியாகி உள்ளனர்.



## ஜெருசலேம் தேவாலயத்தில் 266 ஆண்டுகளாக ஒரே இடத்தில் நகர்த்தப்படாமல் இருக்கும் ஏணி

ஜெருசலேமில் அமைந்துள்ள ஒரு தேவாலயத்தில் இருக்கும் ஏணி ஒன்று 2 நூற்றண்டுகளுக்கும் மேலாக ஒரே இடத்தில் இருக்கிறது. அதன் இடத்தில் இருந்து இன்று வரை யாரும் அதனை நகர்த்தவில்லை. கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவர்களின் புனித தலமாக கருதப்படும் ஜெருசலேம், உலகப் புகழ்பெற்ற ஒரு சுற்றுலா தலமும் கூட. ஜெருசலேமிற்கு புனித யாத்திரை வரும் மக்கள் இந்த ஏணியையும் தவறாமல் பார்த்து விட்டு செல்கின்றனர். அவ்வளவு முக்கிய காட்சிப்பொருளாகிவிட்டது!

ஏன் இந்த ஏணி 266 ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருக்கிறது? ஜெருசலேமில் அமைந்துள்ளது புனித செபுல்கர் தேவாலயம். இந்த தேவாலயத்தின் வெளிபுறத்தில் ஒரு ஜன்னலுக்கு கீழே இருக்கிறது இந்த ஏணி. தேவாலயத்தில் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள வந்தவர்களில் ஒருவர் அந்த ஏணியை தவறுதலாக அங்கே விட்டுச் சென்றுவிட்டார். அப்போதிருந்து அந்த ஏணி அங்கேயே தான் இருக்கிறது. சரி தவறுதலாக வைக்கப்பட்டது தானே பின் ஏன் அங்கு விட்டு வைத்திருக்கிறார்கள் என்றால், அதற்கு அவர்கள் கூறும் காரணம், இந்த சர்ச் சார்ந்த அனைத்து முடிவுகளையும் 6 கிறிஸ்தவ சமூகங்கள் தான் கலந்தாலோசித்து எடுக்கின்றன. அவர்கள் அனைவரும் இந்த ஏணியை நகர்த்தலாம் என்று ஒப்புக்கொண்டால் மட்டுமே இதன் இடம் மாற்றப்படுமாம்! 1759 ஆம் ஆண்டு புத்துப்பித்தல் பணிகளுக்காக வந்த வேலையாள் ஒருவர் அங்கு அந்த ஏணியை மறந்து விட்டுச் சென்றிருக்கிறார். இந்த ஏணி குறித்து கூறுபவர்கள், பல விதமான வெவ்வேறுசிந்தனைகளுடையபல்வேறுகிறிஸ்தவ சமூகங்கள் உருவாகிவிட்டன. ஒரு ஒருவரும் தாங்கள் ஆதிக்கம் செலுத்த முயலுகின்றனர். அவர்களுக்குள் அடித்துக்கொள்கின்றனர். ஆனால், இந்த ஏணியை நகர்த்துவது பற்றி யாரும் எதையும் செய்வதில்லை என்கின்றனர்.



## குழந்தைகளை வேலைக்கு அமர்த்திய மெக்டொனால்ட் நிறுவனங்களுக்கு அபராதம்

அமெரிக்காவின் கென்டக்கி மாநிலத்திலுள்ள மெக்டொனால்ட் உணவகங்களில் சட்டவிரோதமாக குழந்தைகளை வேலைக்கு அமர்த்தியிருப்பதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணையில் மெக்டொனால்ட் உணவகங்களில் சுமார் 300 குழந்தைகள் சட்டவிரோதமாக வேலை செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து 3 மெக்டொனால்ட் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு 2.12 இலட்சம் டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது. இதில் லூயிஸ்வில்லே உணவக உரிமையாளரும் ஒருவர்.

இதுதொடர்பாக தொழிலாளர் நலத்துறை கூறியிருப்பதாவது:- லூயிஸ்வில்லே உணவகத்தில் 10 வயது சிறுவர்கள் குறைந்த சம்பளத்தில் வேலை பார்த்ததை விசாரணை அதிகாரிகள் கண்டறிந்தனர். லூயிஸ்வில்லே பாயர் புட் எல்எல்சி நிறுவனமானது, 10 மெக்டொனால்ட் உணவகங்களை நடத்துகிறது. அங்கு 16 வயதுக்குட்பட்ட 24 சிறுவர்களை வேலைக்கு வைத்துள்ளது. அவர்களை அனுமதிக்கப்பட்டதை நேரத்தைவிட அதிக நேரம் வேலை செய்ய வைத்துள்ளது. அவர்களில் இரண்டு பேர் 10 வயது சிறுவர்கள். அவர்கள் சில நேரங்களில் அதிகாலை 2 மணி வரை வேலை செய்துள்ளனர். ஆனால் அதற்கான சம்பளம் வழங்கப்படவில்லை என விசாரணையில் தெரிய வந்துள்ளது. வேலைக்கு அமர்த்துவதற்கான குறைந்தபட்ச வயதிற்குக் கீழ் உள்ள சிறுவர்கள், ஆர்டர் செய்யப்படும் உணவுகளைத் தயாரித்து விநியோகிப்பது, கடையை சுத்தம் செய்வது உள்ளிட்ட பல வேலைகளை செய்துள்ளனர் என தெரிவித்துள்ளது. தொழிலாளர் நலத்துறை கூறியுள்ள இரண்டு 10 வயது சிறுவர்களும், உணவகத்தின் முகாமையாளரை பார்க்க வந்த அவரது பிள்ளைகள் என்றும், அவர்கள் வேலை செய்யவில்லை என்றும் உணவக உரிமையாளர் சீன் பாயர் குறிப்பிட்டுள்ளார்.














# வேலை வாய்ப்பு

வவுனியாவில் இயங்கி வரும்
தினப்புயல் வாராந்த பத்திரிகைக்கு
உதவி ஆசிரியர் மற்றும்
பக்க வடிவமைப்பாளர்கள் தேவை

விண்ணப்பிப்போர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன்
பதவியையும் குறிப்பிட்டு அனுப்பவும்
thinappuyal2014@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு : 077 6906182 , 077 8195947

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.05.2023 அன்று வெளியிடப்பட்டது.